தென்மொழி

THANJAVUR
5 JUL 1979



சுவடி : 15. ஓலை : 11.
விலை. 1. உருபா.

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

நமக்கு வந்த மடல்கள்.

(இம்மடற் பகுதிக்கு எழுதுபவர்கள், தங்கள் கருத்துகளை நீண்ட கட்டுரையாக எழுதாமல் மிகமிகச் சுருக்கமாக எழுதி விடுக்க வேண்டுகின்றோம்.)

0:651: மதிப்பிற்குரிய ஐயா, தமிழக முதல்வர் இவ்வாண்டுப் பொங்கலின் போது வரவுசெலவுத் திட்டத்தில் தமிழ் வளர்ச்சிக்கான 'புரட்சிகரமான' திட்டங்களை அறிவிக்கப் போவதாக அறிவித்தார். அதே சட்டமன்றத் கூட்டத் தொடரிலேயே இந்தி எதிர்ப்புத் தீர்மானத்தை நிறைவேற்றப் போவதாகவும் அறிவிக்கப்பட்டது. ஆனால் இரண்டையுமே காணவில்லை. இது பற்றித் தமிழ்க் காப்பே தாம் பிறவியெடுத்ததன் நோக்கம் என்று கூறிக் கொள்ளும் எதிர்க் கட்சினர் வாயே திறக்கவில்லை; இது நமக்கு வியப்பில்லை. ஆனால் 'தென்மொழி' இது பற்றி ஒன்றும் கூறவில்லை என்பதைத்தான் நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. மாறாக இன்றைய உலகத்துக்கு ஒவ்வாதது என்று உலகத்தோரால் நாளுக்கு நாள் உணர்ந்து வருவதாகிய நாடாளுமன்றக் குடியரசு முறையின் மீப் பெருங் கேடுகளில் ஒன்றுக்காகப் பரிந்து "தென்மொழி"யின் விலை மதிப்பற்ற ஆறு பக்கங்களை வீணடித்திருப்பதுதான் நமக்கு வியப்பாயிருக்கிறது. ஆசிரியவுரை (சுவடி **15** ஓலை **10**). நமக்கு இரண்டு ஐயங்கள். ஒன்று தென்மொழியார் தாம் நிற்கும் நிலைபற்றியும் தாம் செல்ல இருக்கும் இலக்குப் பற்றியும் தெளிவுடன் உள்ளாரா என்பது. மற்றொன்று நாம் தான் அவர் பற்றிய தெளிவின்றி உள்ளோமா என்பது. தங்களன்புள்ள,

—**செ. கரிகாலன்**, மதுரை.

0:652: அன்புள்ள ஐயா, வணக்கம்! தென்மொழி இதழைத் தூய வெள்ளைத்தாளில் அச்சிட இயலா நிலைமையினை விளக்கியுள்ளீர்கள். தென்மொழி பொதுவான தாளிகை நிலையினின்றும் மாறுபட்ட பொன்னெனப் பொக்கசமெனப் பேணிக்காக்க வேண்டிய ஒன்றாக விருப்பினும், வாங்குவோர்க்குத் திடுமென ஒன்றரை மடங்கு விலையை அறிவித்தால் இடர்ப்பாடாகத்தானிருக்கும். எனவே, அச்சுத்தாளில் வெளியிட முடிவெடுத்திருப்பது நன்றே. நமக்குக் கருத்துகள்தாம் முகாமையானவை. அவை எவ்வகைத் தாளில் அச்சிடப் பெறுகின்றன என்பதன்று. தொடர்கவே தொடர்ந்து.

இம் மாத (மேழ) இதழின் ஆசிரிய உரை மிகச் செப்பமாக உள்ளது. ஏதோ பல்லாண்டுகளாகத் தொழில் துறையில் அதுவும் தொழிற் கழக ஈடுபாட்டில் மிக்க ஒருவர் எழுதியது போன்று இருப்பது மிகச்சிறப்பு. இன்றைய பாட்டாளியர் அரசினர் நிலைமைகளைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளீர்கள். நடுநிலை கோடாத் தங்களைப் போன்ற ஆன்றோர் சொற்கேட்டுச் செயற்படுத்தல் நமதரசின் கடனாகும்.

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை'' எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!

சுவடி: 15 ஓலை 11.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

விடை தி. பி. ௨௰௧௰-

மே சூன்-1979.

தென்மொழி

இலக்கிய இதழ்

பொறுப்பாசிரியர்: **பெருஞ்சித்திரனார்.**

ஆசிரியர்: **மா. பூங்குன்றன்.** அறி.இ; க.மு.

புரப்பாசிரியர்கள்

தென்மொழி முல்லைவாணன் (சிங்கை)

தென்மொழி மறை. நித்தலின்பனார் (தமிழ்நாடு)

கலைக்கோயில் மாணிக்கப் (சிங்கை)

தென்மொழி. ந. முத்துக்குமரன் (தமிழ்நாடு)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்.

[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும், பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.]

தமிழர்களே தமிழைப் புறக்கணிக்கும் தணிப்பரிதாங் கொடுமை!

அண்மையில் கோவையிலிருந்து ஒரு செய்தி நமக்கு வந்தது. ஒவ்வொரு கோடை விடுமுறையிலும் தென்னகம் வந்து போகும் தில்லித் தமிழ்ப் பேராசிரியர் ஒருவரை, கோவைப் பகுதியிலுள்ள தமிழ் மன்றம் ஒன்றில் பேச அழைத்திருக்கிறார்கள். அவர் எழுத்துச் சீர்திருத்தம் பற்றித் தாம் பேசுவதற்கு இசைந்தால்தான் நிகழ்ச்சிக்கு ஒப்புக் கொள்ள முடியும் என்று சொல்லியிருக்கிறார். அதற்கு அந்தத் தமிழ்மன்றத்தார், 'எழுத்துச் சீர்திருத்தம் பற்றி' அவர் கருத்தை ஏற்கவியலாதென்றும், ஆயினும் மாறுபட்ட கருத்தையும் ஆராயும் அறிவியல் நெறிப்படி அவர் பேச்சைக் கேட்க அணியாமாயுள்ளதாயும், ஆனால் தமிழ்ப் பேராசிரியர் தம் பேச்சைத் தூயத் தமிழில் பேச வேண்டும் என்று மன்றம் விரும்புவதாகவும் தெரிவித்திருக்கின்றார்கள். அதற்கு அத் தமிழ்ப் பேராசிரியர் இவ்வளவு கட்டுப்பாடுகள் (அவர் சொல்லால் 'நிபந்தனைகள்') அமைத்து மேடையேற்றும் நிலையில் தாம் இல்லையென்றும்,

தம் நடையில் பேசுவதே இயல்பென்றும், எனவே தம் நடையில் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வோருடன் மட்டுமே தாம் பேசுவது இயலுமென்றும், தாம் சுற்றுப் போக்கையும் (அவர் சொல்லால் பயணம்',) சொற்பொழிவையும் வருமானத்திற்கு மேற்கொண்டவரல்லர் என்றும் பலவாறு கூறிக் கூட்டத்திற்கு இசைய மறுத்திருக்கிறார். இது பற்றிக் கோவை அன்பர் விளக்கமாக நமக்கு எழுதி, அவர் தமிழ் பற்றிக் கொண்ட கொள்கையைக் கண்டித்து வருந்தியுள்ளார்.

இந்நிகழ்ச்சியை நம் நிலையில் கவனிப்பதற்கு முன், பொதுவான ஒரு நிலையில் கவனித்தாலும், பேராசிரியருக்கு எப்படி அவர் பேச்சுக்கு (எழுத்துச் சீர்திருத்தம் பற்றிப் ஒப்பினால் தான் இசைவளிப்பது என்னும்) ஒரு கட்டுப்பாட்டை அவர் வகுத்துக் கொண்டாரோ, அப்படியே மன்றத்தாரும், தாம் கேட்கவிருக்கும் சொற்பொழிவு (கருத்து நிலையால் அன்று; எல்லாருக்கும் தாய்மொழியான பேச்சு நிலையால்) இப்படியிருத்தல் வேண்டும் என்று ஒரு கட்டுப் பாட்டை அவர்கள் அமைத்துக் கொண்டதில் பிழையில்லை என்றே கருத வேண்டியுள்ளது. பேசுபவர் ஒரு கொள்கையை வகுத்துக் கொள்ளும்பொழுது, கேட்பவர்கள் மட்டும் ஒரு கொள்கையை வகுத்துக் கொள்ளக் கூடாதா என்ன? இத்தனைக்கும் இருவருக்கும் பொதுவான தமிழ் மொழியில் பேச வேண்டும் என்பது பற்றி, அதுவும் தூய தமிழ் மொழியில் பேச வேண்டும் என்று தமிழ் தெரியாத ஒருவரை அவர்கள் கேட்டிருந்தால் அதை வேண்டுமானல் 'சரியன்று' என்று சொல்லலாம். அதையும் தவறு என்று சொல்லமுடியாது. தமிழ் நன்ருகத் தெரிந்த, தமிழ் கற்பிக்கின்ற, அதுவும் தமிழில் ஆய்வு அறிஞர் பட்டம் பெற்ற, தமிழ்ப் பேராசிரியர் ஒருவரிடம் 'தூய தமிழில் பேசுங்கள்' என்று கேட்பதில் தவறே இல்லை என்பது மட்டுமன்று; அப்படிக் கேட்பதுதான் சரி என்றுங் கூடச் சொல்லி விடலாம். ஏனெனில், ஆங்கிலப் பேராசிரியர் ஒருவரிடம் தூய ஆங்கிலத்தில் பேசுங்கள் என்ருல் அவர் இன்னும் ஒருபடி மகிழ்ச்சியே அடைவார். (தூய ஆங்கிலம் என்பது இயலாத தென்பது வேறு. ஆனல் தமிழ் அவ்வாறன்றே). ஆனல் தமிழ்ப் பேராசிரியர் ஒருவர், அதுவும் தமிழைத் தாய்மொழியாய்க் கொண்ட ஒருவர் 'தூய தமிழில் பேச வேண்டும்' என்னும் வேண்டுகோளைப் புறக்கணிப்பானேன்? உண்மை இதுவாகத் தான் இருக்கமுடியும். ஒன்ருல் அவர் தமிழ் வளர்ச்சி பற்றி அக்கறை கொள்ளாதவராக இருத்தல் வேண்டும். அன்ருல், தூய தமிழில் பேசத் தெரியாதவராக இருத்தல் வேண்டும். தமிழ்ப் பேராசிரியர் ஒருவர்க்குத் தூய தமிழில் பேசத் தெரியாது என்பது அவ்வளவு சரியன்று; ஒப்பக் கூடியதுமன்று. எனவே 'தூய தமிழில் பேசக் கூடாது' என்பதை வேண்டுமென்றே ஒரு கொள்கை எனக் கடைப்பிடிப்பவராக அவர் இருத்தல் வேண்டும். இப்படிப்பட்டவர் தமிழ் மேல் அக்கறை

கொண்டவராக இருப்பார் என்பதை நாம் எப்படி நம்புவது? எனவே அவர் தமிழ் எழுத்துச் சீர்திருத்தக் கொள்கையும் தமிழ் வளர்ச்சியில் அவர் கொண்ட அக்கறையால் அஃது ஏற்பட்டது என்பதும் எப்படி உண்மையாக இருக்க முடியும்? இதற்கு அப் பேராசிரியர் தாம் நடத்தும் இதழ் ஒன்றில் கையாளும் தமிழ் நடையே சான்றாகும்.

தமிழ் நடை ஓர் இருபது முப்பாதாண்டுகளுக்கு முன் இருந்த நிலை வேறு; இன்று ஓரளவு தூய தமிழாக வளர்ந்துள்ள நிலை வேறு. பேருந்து, அலுவலகம், அமைச்சர், அரசு, குடியரசு, போக்குவரத்து, நெடுஞ்சாலை, செயலாளர், தலைவர், சொற்பொழிவு, முன்மொழிதல், வழிமொழிதல், தொடர்வண்டி, உணவு விடுதி, தங்குமனை, மருத்துவ மனை, காவல்துறை, வானூர்தி, ஊராட்சி மன்றம், சிற்றுண்டி, கல்லூரி. வாரியம், செயலகம், முதலமைச்சர், தலைமையமைச்சர், பொதுப்பணித்துறை, கட்டணம், ஆட்சித் தலைவர், சுற்றுலா விடுதி, புதினம், திரைப்படம், காசோலை, பணவிடை, அஞ்சலட்டை, உள் நாட்டுறை, முகவர், ஒப்பந்தம், வேட்பாளர், தேர்தல், செய்தியாளர், மாவட்டம், வட்டம், வேலை நிறுத்தம், மாநிலம், வேதியல், வரலாறு, அறிவியல், தனிமம், தொல்பொருள் ஆய்வு, இயக்குநர், பதிவு அலுவலர், ஒளிப்பதிவு, புகைப்படம், கூட்டுறவு, இயக்கம், கட்சி, ஊழியர், தட்டச்சு, கழகம், மன்றம், அறமன்றம், வழக்கறிஞர், வானொலி, நாள்காட்டி, நாடாப்பதிவு, அஞ்சலகம், சீருடை, இருக்கை, முன்னுரிமை, பதிவு எண், மதிப்பெண், தேர்வு, தனிப் பயிற்சிக் கல்லூரி, நூலகம்—முதலிய நூற்றுக்கணக்கான பொது மக்கள் புழக்கச் சொற்கள் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த தில்லை. இவ்வகையில் தமிழ்மொழி இடைக்காலக் கலப்பு நிலை யிலிருந்து படிபடியாகத் தூய தமிழாகி வருவதை யாரும் மறுத்து விட முடியாது. இந்நிலையில் அத் தில்லித் தமிழ்ப் பேராசிரியர் நடத்தும் இதழில் வேண்டுமென்றே கலப்பு நடையை அவர் கையாண்டு வருவது மிகவும் வருந்தத்தக்கதாகும். அவர் நடையில் புழக்கத்திற்கு வந்துள்ள நல்ல தூய தமிழ்ச் சொற்களுக்குக் கூட, இவர் விடாப் பிடியாக வட சொற்களையும் ஆங்கிலச் சொற்களையும் கையாண்டு வருவது தமிழ் வளர்ச்சியில் இவர்க்கு அக்கறையிருப்ப தாகக் காட்டவில்லை.

உயர் நெறி மன்றம் என்று பெரும்பாலார் இக் காலத்து எழுதி வருவதையும், தமிழ் ஆட்சி மொழியாக மாறிய பின் அரசுச் சார்பாக எழுதப் பெற்று வருவதையும் கூட இவர் ஒப்பாமல், தம் இதழில் **உச்ச நீதி மன்றம்** என்றே எழுதி வருகிறார். அதே போல் விடுதலை அல்லது உரிமை என்பதைச் **சுதந்திரம்** என்றே தங்கு தடையின்றிக் கையாளுகிறார். இன்னும், நடைமுறைப் படுத் தினார்கள் என்பதை **'அமுல் படுத்தினார்கள்'** என்றும், வழக்கம் என்பதைச் **'சம்பிரதாயம்'** என்றும், கரணம் என்பதை **பல்டி**

என்றும், பொதுவுடைமைக் கட்சி என்று அக் கட்சியினரே கூட தமிழ்ப் படுத்தி எழுதுவதை இவர் **'கம்யூனிஸ்டு கட்சி'** என்று விடாப்பிடியாகவும், காவல் துறை அதிகாரிகள் என்பதைப் **போலீஸ் அதிகாரிகள்** என்றும், பதிவை **ரிக்கார்டு** என்றும், மதிப்பெண்களை **மார்க்குகள்** என்றும், மருத்துவமனையை **ஆஸ்பத்திரி** என்றும், (ஆஸ்பத்திரி என்பது Hospital என்னும் ஆங்கிலச் சொல்லைப் பலுக்கத் தெரியாத படிக்காத சிற்றூர்ப்புற மக்கள் சொல்லுஞ் சொல்), மருத்துவர் என்பதை **டாக்டர்** என்று ஆங்கிலச் சொல்லாலும், அறிவு என்பதைக் கூட **புத்திசாலித்தனம்** என்றும், நோயைக் கூட **சீக்கு** என்றும் (இதுவும் Sick என்னும் ஆங்கிலச் சொல்லைக் கொச்சையாக வழங்குவது), அறிவியல் என்று நடுநிலைப் பள்ளி மாணவர்களும் பயன் படுத்தும் சொல்லை **விஞ்ஞானம்** என்றும், இன்னும் எளிதான வழக்கில் உள்ள தூய தமிழ்ச் சொற்களான பொது, தொல்லை, தேவை, மகிழ்ச்சி, துன்பம், ஆட்சித் தலைவர், வட்டம், ஆள்கள், உறுதி, ஆற்றல், விரைவு, செய்தித்தாள், அரசு என்பவற்றை, **சாதாரணம், சிரமம், அவசியம், ஆனந்தம், வேதனை, மாவட்டக் கலெக்டர் தாலுக்கா, ஆசாமிகள், நிச்சயம், சக்தி, அவசரம், பத்திரிக்கை, அரசாங்கம்** என்னும் பிற மொழிச் சொற்களாலேயே வேண்டுமென்றே குறிப்பதும், இது பற்றிக் கேட்டால், இவரும் இவரைப் போலும் பகுத்தறிவாளர்கள் என்று கூறிக் கொள்வதில் மிகப் பெருமைப் பட்டுக் கொள்ளும் சிலரும், பொது மக்களுக்கு விளங்குகின்ற மொழியிலேயே தாங்கள் பேசுவதும் எழுதுவதும் ஆகக் கூறுவதும் மிகவும் வருந்துவதற்குரிய செயல்களே. மகிழ்ச்சி, தேவை, ஆள், துன்பம், தொல்லை என்னும் சொற்களைக் கூட பொது மக்கள் விளங்கிக் கொள்ள மாட்டார்களா? அப்படியானல் இவர்கள் கூறும் பொது மக்கள் எத்தரத்தினர் என்பது நமக்கு விளங்கவில்லை. தினத்தந்தி எழுதும் நடைதான் இவர்கள் கூறும் பொதுமக்கள் விளங்கிக் கொள்ளும் நடையென்றல், இவர்கள் எழுதும் நடை அதைவிட உயர்ந்த நடையில்லையென்று இவர்கள் சொல்ல முடியுமா? அதை மட்டும் பொது மக்கள் விளங்கிக் கொள்ள முடியும் என்று எப்படி இவர்கள் எதிர்பார்க்கிறர்கள். இவருடைய இதழ்களிலேயே சில நேரங்களில் இவரை அறியாமலேயே கையாளப் பெறும் **ஓர்மை அண்மை, ஆயத்தம், குழு, இழிசினர், பின்னணி, சற்று, பொருட்டு, ஊதியம், இன்னல்** முதலிய தூயத்தமிழ்ச் சொற்களும், **தருணம், வர்க்கம் வித்தகம், சாட்டாங்கம், மகோன்னதம்** போலும் வடச் சொற்களும் இவர் கூறும் பொதுமக்களுக்கு விளங்குகின்ற சொற்கள்தாமா? அப்படியானல் மகிழ்ச்சி, துன்பம் மட்டும் ஏன் விளங்காது? இனி, பொது மக்களுக்கு விளங்கும் என்னும் சாக்கில், இவர் அவ்விதழில் கையாளும் கொச்சைத் சொற்களுக்கும், தவருன வழக்குச் சொற்களுக்கும், பிழையான சொற்களுக்கும் அளவே இல்லை.

அவற்றையெல்லாம் பட்டியலிட்டுக் காட்டுவதானுல் பக்கங்கள் நீளும். அவை தேவையானுல் பிறகு எழுதுவோம்.

இனி, பொது மக்களுக்கு விளங்கும் ஒரு நடை வேண்டும் என்றுல், அறிவு வளர்ச்சியென்பதே இருக்கக் கூடாது என்பது இவர்கள் எண்ணமா? அறிவு வளர்ச்சிக்குத் தகுந்தபடி மொழியும் வளர்வதும் சொற்கள் பெருக வேண்டுவதும் இயற்கைதானே! மொழி வளரவே கூடாது என்பது இவர்கள் எண்ணமாக இருக்கு மாஞல், அறிவும் ஒரு நிலைப்பட்டதாக இருக்க வேண்டும் என்பது தானே பொருள்.

இனி, பெரியார் கொள்கையைப் பரப்புகின்றதாகக் கூறிக் கொள்ளும் சிலர் வேண்டுமென்றே தமிழைப் பழிப்பதை மிகவும் வருத்தத்துடன் குறிப்பிட வேண்டியுள்ளது. அக் கழகக் கொள்கை இதழாகிய **விடுதலை**யில் வரும் நடையும், சொற்களும், பார்ப்பன இதழ்களைப் பார்க்கினும் தமிழ் மொழிக்குக் கேடு செய்பவை. தமிழ் மொழியின் தூய்மையையும், தனிமைச் சிறப்பையும், மேன்மை யையும் பெரியார் அவர்கள் பலவிடங்களில் ஒப்பி எழுதியும் பேசியும் வந்ததையும், அத்தூய்மையைத் தமிழர்கள் காத்துக் கொள்ள வேண்டும் என்று கருத்துக் கூறியதையும் தென்மொழியில் முன்பே சான்றுகளுடன் எடுத்துக் காட்டியுள்ளோம். குமுகாய, அரசியல் கேடுகளைப் போக்குவதிலேயே தம் வாணாளின் முழுப் பொழுதையும் செலவிட்ட அப் பெருந்தகை, தமிழ் மொழித் தூய்மைப் பற்றிக் கருத் தறிவிக்கத்தான் முடிந்ததே தவிர, அதைக் கடைப்பிடித்துக் காட்டுவதற்குரிய முயற்சியையோ, செயலையோ மேற் கொள்ள முடியாமற் போனதில் வியப்பில்லை; இழுக்கும் இல்லை. ஆனுல் அவரைப் பின்பற்றுவதாகக் கூறிக் கொள்ளும் தமிழர்கள் தமிழ் மொழியைத் தாழ்த்துவது பற்றி நாம் கவலைக் கொள்ளாமல் இருக்க முடியாது. அந்நிலையை எடுத்துக் காட்டாமலும் இருக்க முடியாது. இனி, கொள்கை நிலையிலும், செயல் நிலையிலும் ஆரிய நச்சுக் கொள்கைகளையே பரப்புவதில் நேரடியாகவும் மறைமுகமாகவும் வரிந்து கட்டிக் கொண்டு முனைந்துள்ள இதழ்களில் தலை சிறந்ததான **தினமணி**யிலும் கூட, நல்ல தமிழ் நடையைச் சிற்சில நேரங் களில் பார்க்க முடிகிறது.

King Asoka என்னும், வானூர்திப் பெயரை, **'மன்னன் அசோகன்'** என்று தினமணி மொழிப் பெயர்த்தெழுதுகிறது, (10-1-78). காஷியர் என்று எழுதும் பழக்கமுள்ள அது **காசாளர்** என்று எழுதுகிறது, (7-1-78). 'பிலிம்மோத்சவ' என்று 'தமிளர்' நடத்தும் செய்தித் தாள்கள் எழுதுவதைக் கூட அது, **திரைப்படத் திருவிழா** என்று மொழி பெயர்த்தது; (7-1-78) சுயேட்சை அதி கார ஸ்தாபனம் என்று எழுதும் வழக்கமுள்ள அது **தன்னதிகார அமைப்பு** என்று அழகிய தமிழில் எழுதுகிறது; (10-1-78). அசெம்பளி என்று எழுதி வந்ததைக் கைவிட்டு, **சட்டப்பேரவை**

என்று மொழி பெயர்த் தெழுதுகிறது; (10-1-78). எம்ப்ளாய் மெண்டு எக் சேஞ்சு என்று நம்மவர் எழுதுவதை **வேலை தேடித் தரும் நிறுவனம்** என்று தூய தமிழில் எழுதுகிறது; (10-1-78). இன்னும் நம் தில்லிப் பேராசிரியரும், அவர் போலும் பகுத்தறி வாளரும், நம் திராவிடர் கழகத் தோழர்களும், சிற்சிலகால் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சிலரும் எண்ணிப் பார்க்கவும் இயலாத படி, 'வாராண்ட்' என்னும் சொல்லைப் **பிடி ஆணை** என்று கூட மொழி பெயர்க்காமல் **பிடி கட்டளை** என்று தூய தமிழாகப் புதுச் சொல் புனைந்தெழுதுகிறது; (22 3-78). தில்லிப் பேராசிரியர் போல் ஆஸ்பத்திரி என்று எழுதாமல் **மருத்துவமனை** என்றும் (6 1-78) மைக்கிராஸ் கோப் என்பதை **நுண் நோக்கி** (7-5-78) என்றும், **Automatic caution Signal** என்பதைத் **தானியங்கி எச்சரிக் கைக் கருவி** (8-5-78) என்றும் தினமணி எழுதுகிறது என்பதை எண்ணுகையில், நம் விடாப்பிடிப் பகுத்தறிவாளர்களையும் தில்லிப் பேராசிரியர் போன்றவர்களையும் நினைத்துச் சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை

இனி, **விடுதலை** நிலை என்ன? தமிழனுக்கு மட்டுமே அது பாடு படுகிறதா? அப்படியானால் தமிழன் யார்? அவனுக்கு எப்படி எப்படிப் பாடு பட முடியும்? அவன் எவ்வெத்துறையில் தாழ்ந்து கிடக் கின்றானோ, அடிமைப்பட்டுக் கிடக்கின்றானோ, கண்மூடிக் குருடாய்க் கிடக்கின்றானோ அவ்வத்துறையிலெல்லாம் அவனை மீட்கப் பாடு படுவதே அவனை உண்மையில் மீட்பதாகும். அரசியல் நிலையில் அவன் முன்னேறிக் குமுகாய நிலையில் அவனைக் கீழ்மைப்பட வைத்து விட்டாலும் அந்நிலை அவன் முன்னேற்றம் என்று சொல்ல முடியாது. இனி, இன நிலையில் அவனை முன்னேற்றி அறிவு நிலையில் அவன் தாழ்ந்து கிடந்தாலும் அவன் முன்னேறினான் என்று கூற முடியாது. அது போலத்தான் எல்லா நிலையிலும் முன்னேறி மொழி நிலையில் பிற மொழிகளுக்கு அடிமைப் பட்டுக் கிடந்தாலும் அவன் முன்னேற்றம் நெடுநாளைக்கு நிற்க முடியாது. ஏனெனில் வரலாற்று அடிப்படையில், மொழி நிலையில் அடிமைப்பட்ட பின்பே இன நிலையிலும், அரசியல் நிலையிலும் படிப்படியாக அவன் தாழ்ந்து போனான். எனவே மொழி என்பது ஓர் இனத்தின் முதுகெலும்பு என்பதை அறிந்து கொள்ளுதல் வேண்டும். 'மொழியென்றால் உடம்பின் நரம்பு; நம் முத்தமிழ் மொழியோ தமிழர் வரம்பு' என்பார் பாவேந்தர். இனி தமிழர்க்கு நரம்பாகவும் வரம்பாகவும் உள்ள தமிழைப் பற்றி அக்கறை கொள்ளாமல், அதனை முன்னேற்றாமல், ஆரியரால் வீழ்த்தப்பட்ட அதன் தூய்மை நிலையைப் பாதுகாவாமல் தமிழனை முன்னேற்றுகிறேன், அவன் முன்னேற்றத்தில் அக்கறை கொள்கிறேன், அவன் நலன்களைப் பாதுகாக்கிறேன் என்பது போலி யான கூற்றும், ஏமாற்றுத் தனமான கூப்பாடும், தன்னம்பிக்கை யற்ற உரையும், வரலாற்றடிப்படை தெரியா வரட்டுக் கூச்சலும்

ஆகும். எனவேதான் தினமணி கொண்ட தமிழ்க்காப்பு எண்ணத்தை விடுதலையும் தில்லிப் பேராசிரியரும் கொள்ளவில்லையே என்று நாம் கவலைப்பட வேண்டியிருக்கிறது.

'அமைச்சர்கள் வெளி நடப்புச் செய்தனர்' என்று பிறசெய்தித் தாள்கள் எழுதியதை, விடுதலை, மந்திரிகள் 'வாக் அவுட்' என்று எழுதுவது எதனால்? பொதுமக்களுக்கு 'வெளி நடப்பு' என்பது விளங்காது; 'வாக் அவுட்' என்பது புரியும் என்று அது கருதுகிறது என்றால், அந்தப் பொது மக்கள் என்பவர்கள் எங்கிருக்கிறார்கள்? இங்கிலாந்திலா? மொழியைப் பற்றி விடுதலைக்கு ஏன் அக்கறை யில்லை? தமிழ்மொழி இல்லாமல் தமிழர்கள் எப்படியிருப்பார்கள்? இவர்கள் கடவுள் நம்பிக்கையில்லாதவர்கள் என்பதற்காக, நடைப் பாதைக் கோயில் ஒன்றில் மதுப்புட்டில்களோடு மோதிய மகிழுந்து ஒன்று பற்றிய செய்தியை விடுதலை இப்படி வெளியிட்டிருந்தது. 'விஸ்கி—ரம் புட்டிகளோடு ஆண்டவனிடம் டேஷ்' (18-4-78). இவர்களுக்குக் கடவுள் நம்பிக்கையில்லாமலிருப்பதைப் பற்றி நாம் துளியும் வருந்தவில்லை. ஆனால் நாம் அன்றாடம் ஒருவர்க் கொருவர் பேசி உணர்வைப் பரப்பிக்கொள்ள உதவும் தாய்மொழியின் அறிவியல் உண்மைகளை அறியாமல் இருக்கிறார்களே என்பதில்-தான் நமக்கு வருத்தம். படிக்காதவனும் படித்தவனும் மாந்த நிலையில் ஒரே மதிப்புடையவர்களாய் இருந்தாலும், இருவர் மன வளர்ச்சியும் நடைமுறைகளும் ஒன்றாயிருப்பதில்லை. அது போல் ஓரளவு கற்றவனையும் கல்லாதவனைப் போல் கருதிக் கொண்டு அறிவு வளர்ச்சியைத் தடை செய்வது முன்னேற்றம் ஆகாது. அறிவு வளர்ச்சியும் மொழி வளர்ச்சியும் மாந்த முன்னேற்றத்தின் இணைந்த கூறுகள். ஒன்று முன்னேற ஒன்று தேவை. இவற்றுள் ஒன்றைத் தாழ்த்தி ஒன்றை உயர்த்த முடியாது. இனி மொழி என்பதை எந்த மொழியாகிலும் ஒன்று என்று கொண்டால், இன முன்னேற்றத் தையும் வரையறுத்து விட முடியாது. விடுதலைக்கு ஆங்கிலத்தின் மேலும் சமசுக்கிருதத்தின் மேலும் உள்ள பற்று, அவ்விரு மொழி களையும் உள்ளடக்கிய—நூற்றுக்கணக்கான மொழிகளுக்கு மூல மாகவும் தாயாகவும் உள்ள—தமிழ் மொழியின் மேல் இல்லை. நம் தில்லிப் பேராசிரியரும் அத்தகையவர்தாம் என்பதை இக்கட்டுரைத் தொடக்கத்துக் காட்டிய நிகழ்ச்சி நம்மை எண்ணச் செய்கிறது. கடந்த இந்தியெதிர்ப்பு மாநாட்டில் திருச்சி திராவிடர்கழகத் தலைமை யாளர் ஒருவர் தமிழைப் பழித்தமை இன்னும் நம் நெஞ்சில் முள்ளாய் உறுத்துகின்றது. பார்ப்பனர்கள் தமிழைப் பழிப்பதிலும் அழிப் பதிலும் நாம் வியப்படையவில்லை. இனி அவர்கள் முயற்சி வெற்றி பெறப் போவதுமில்லை. ஆனால் அதற்குள் நம் தமிழர்களே தமிழைப் பழிக்கவும் அதன் வழி அழிக்கவும் முற்பட்டு விட்டார்களே என்ப தில்தான் நமக்கு ஆற்றொணாத் துயரமும் கவலையும் ஏற்படுகின்றன. பகுத்தறிவாளர்கள் ஒப்பும் பாவேந்தர் கண்ட உண்மைகளுள் நல்ல

தமிழை வளர்ப்பதும், சாதியை ஒழிப்பதும் தமிழர் முன்னேற்றத்தின் இரு முயற்சிகளாகக் கூறப் பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்று தவிர்க்கப் பெறினும் மற்றொன்றால் பயன் இல்லை என்பது அவர் கருத்து. அதனைத் தில்லியார் பார்வைக்கும் விடுதலையார் பார்வைக்கும் முன்வைத்து இதனை முடிக்கின்றோம்.

சாதி ஒழித்திடல் ஒன்று—நல்ல
தமிழ் வளர்த்தல் மற்றொன்று!
பாதியை நாடு மறந்தால்—மற்ற
பாதி துலங்குவ தில்லை.



மக்களவை

கொடிய குற்றச் செயல்!

ம:235: தனித்தமிழ் காக்கும் தனிப்பெருந் தலைவ, இந்தக் கல்வியாண்டில் தமிழ்நாட்டுப் 'பாடநூல் நிறுவனம் வெளியிட்டுள்ள புத்தகங்களில் "சீர்திருத்தத்தமிழ்" காணப்படுகிறது. இஃது ஆழ்ந்து கருதுதற்கும், கவலைப்படுதற்கும் உரிய ஒன்று என நான் எண்ணுகிறேன். இச் சீர்த்திருத்தத்தை வலிந்து திணிக்கும் குடியுரிமைக் குற்றத்துக்காகவும், தட்டச்சு, மின்னணுப் பொறி ஆகிய துறைத் தொடர்பு கொண்டோர் இம்மாற்றம் வேண்டி முறையீடு செய்யாமலே-இவர்களாகவே புகுத்துவதற்காகவும், மொழியறிஞர் அல்லாத ஒருவர் சொன்ன, குழப்பம் நிறைந்த, மொழியியலின்படி பல குறைகளுள்ள, ஒரு மாற்றத்தைத் தக்க அறிஞர் குழுவமைத்து ஆராயாமல், அரசியல் பயன் கருதிச் செய்யும் குற்றத்துக்காகவும், இதன் பின் விளைவுகளையும், இதனால் மொழிக்கு நேரும் கேடுகளையும் எண்ணிப்பாராமல் திடுமெனச் செய்த குற்றத்துக்காகவும் தமிழன்பர்கள் தமிழக அரசின்மேல் வழக்குத் தொடுத்துப் போராடி, இது குறித்த அரசு ஆணையை உடனடியாக நிறுத்துமாறு செய்ய வேண்டும். அதுவே, தமிழ் மக்களின் விழிப்புணர்ச்சியைக் காட்டுவதாகும். இதற்குத் தென்மொழியைச் சார்ந்த வழக்கறிஞர்களும், மற்ற அன்பர்களும் பாடுபடவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். வணக்கம். —**கொண்டல் வண்ணன்** பொறி. இ. இறுதியாண்டு, அரசினர் பொறியியற் கல்லூரி, கோவை-641013.

அட்டைப்படம்

அறிவியல் மெய்யறிஞர் ஐன்சுடைன்

(அவரின் நூற்றாண்டு நினைவாக)



நூறாசிரியம்

பெருஞ்சித்திரன்

பாட்டு: ௪௬

அம்ம, வாழி தோழி! நின் காதல்
இம்மா நிலத்தும் பெரிதே! பொழிந்த
விசும்பின் தூய்தே; கதிரின் செவ்விது;
மணியின் காழ்த்தது; பனியின் தண்ணிது;
அறவோர் நெஞ்சினும் அகன்றது; நெறியின்
துறவோர் உளத்தினுந் திண்ணிது; மறவன்
கொடுங்கை அம்பினுங் கூரிதே; அவன்றன்
நெடுங்குறி யெய்பினும் நேரிதே; புலவர்
தடையறு கற்பனை மடையி னாழ்ந்தது;
கொடையருள் நெஞ்சினும் புடைநனி கனிந்தது;
நிணநீர்ப் பெருக்கி முரசுத்தலை செருக்கிப்
பணைக்கால் அலைத்த பருங்கூர்ங் கோட்டின்
களிறு வீழ்த்திய வரியினுந் துணிந்ததே!
குலந்தரு பிரிவைக் குலைத்ததுன் வளைக்கை!
அலர்தலை மிதித்தது மிதித்ததுன் அணிகழல்!
இழிநோக் கெரித்ததுன் எரியுமிழ் இணைவிழி!
பழியறத் துடைத்ததுன் பண்புறு நெஞ்சம்!
செங்கால் நாரையின் தூங்கி யிருந்து,
நுங்குறி பற்றினை; மருட்கையுன் றுணிவே!
சான்றவர் பாங்கின் ஊன்றிய நெஞ்சும்
தோன்றுயர் வினையின் நான்றிய உணர்வும்
தாழ்வறப் பெற்றோன் தடந்தோள்
வாழ்வெனப் பற்றி வரைந்தனை கொண்டே!

பொழிப்புரை: அம்ம! தோழியே! நீ என்றும் வாழ்வாயாக! நினது காதல் இவ்வுலகை விடப் பெரியது; நிறைந்து பெய்த மழைக்குப் பின்னுள்ள விசும்பைப் போல் தூயது; ஒளிக்கதிரை விடச் செவ்வையானது; வயிரத்தைவிட உறுதியானது; பனியை விடக் குளிர்ந்தது; அறம் பேணுவார் நெஞ்சைவிட விரிந்து அகன்றது; நன்னெறியில் துறந்தார் உள்ளத்தைவிடத் திண்மை யானது; மறவனுடைய வளைந்த கையின் அம்பை விடக் கூர்மை யானது; அவனின் நீண்ட குறியின் இலக்கை விட நேரானது; புலவரின் தடையில்லாத கற்பனை மடுவினும் ஆழமானது; கொடை மேவிய அருள் நெஞ்சத்தைவிட முழுதும் மிகுந்த கனிவுடையது; மதநீரைப் பெருக்கி, தன் முரசு போன்ற தலையை நிமிர்த்துப் பெருத்த கால்களை அசைத்து வந்த, பருமையும் கூர்மையும் சான்ற மருப்புகளை உடைய ஆண்யானையைப் போரிட்டு வீழ்த்திய வரிப் புலியை விடத்

துணிவானது! வளையல்களணிந்த நினது கை, குலத்தால் ஏற்பட்ட பிரிவுணர்வைக் குலைத்துச் சிதைத்தது; அதன் மலர்ச்சியுற்ற தலையை வெற்றிக் காப்பிட்ட நின் கால்கள் மிதித்துத் தோய்த்தன; அதன் இழிவான நோக்கத்தை, அனலைக் கக்கும் நின் இரண்டு விழிகளும் எரித்துத் தீய்த்தன; குலப்பிரிவால் நேரவிருந்த பழியை உன் பண்பு சான்ற உள்ளம் துடைத்து நீக்கியது! சிவந்த கால்களையுடைய நாரையைப் போல், அமைந்திருந்து உன் குறியாகிய கணவனைப் பற்றிக் கொண்டனை; உன் துணிவு வியப்பை உடையது! சான்றோர்கள் பக்கத்துப் பொருந்திய உள்ளமும், அவ்வுள்ளத்துத் தோன்றிய உயர்ந்த வினைப்பாடுகளில் பிடிப்புற்ற நல்லுணர்வும், என்றும் தாழ்வில்லாதபடி அமையப் பெற்றவனின், பருத்ததோளை, இதுதான் நமக்குற்ற வாழ்வு எண்ணி என அதனை இறுகப் பற்றி மணந்து கொண்டனை; (அதனால்.)

விரிப்பு: இப்பாடல் அகத்துறையைச் சார்ந்தது.

குலப்பிரிவை மதியாது, கலப்பு மணம் புணர்ந்து கொண்ட தலைவியின் துணிவையும் முனைவையும் வியந்து பாராட்டித், தோழி வாழ்த்தியாகும் இப்பாட்டு.

புன்மையோர் அமைத்த குலப்பிரிவுணர்வுகளுக்குக் குமுகத்தின் எத்திறத்தாரும் கட்டுப்பட்டு அடங்கி, அவற்றைத் துணிந்து விலக்காது, மணவினை முதலிய மங்கல வினைகளில் அப்பிரிவு மேற்கொண்டு வாழ்வு நடத்துகையில், தலைவி அப்பிரிவுணர்வை எதிர்த்து நின்று, தான் விரும்பிய காதலனையே மணந்து பொருந்திய நிகழ்ச்சியைத் தோழியொருத்தி வியந்து பாராட்டி, வாழ்த்திப் பாடியதாகும் இது.

அக்குலப்பிரிவு மதர்த்துப் பொங்கி ஊரை அலைக்கழிக்கும் யானை போல்வது; அதைத் தன் துணிவால் புலியைப் போல் முறியடித்துப் பொருதி, வீழ்த்தினாள் என்கிறாள் தோழி.

முதற்கண், தோழி தலைவியின் காதலை வாழ்த்திப், பின்னர் அதன் தூய்மை நலன்களைக் கூறி மகிழ்ந்து, அதன்பின் அவள் அக் காதல் வெற்றி பெறுவதன் பொருட்டு, அதற்குத் தடையாயிருந்த குலப்பிரிவைப் போராடிப் பொருதியதை சுட்டி வியந்து, அடுத்து, அதுவரை அவள் அமைதியாயும் உறுதியாயும் இருந்ததைப் பாராட்டிப் பின் அவளின் காதலனின் பெருமை கூறி உவந்து, இறுதியில் அவள் பெற்ற வெற்றி வாழ்வை போற்றிக் கூறினாள் என்க.

அம்ம!: கேட்பித்தற் பொருளில் வரும் விளி. நீ கேட்பாயாக!

வாழி தோழி: நீ பெற்ற மணவாளனுடன் என்றென்றும் தோழியே, நீ வாழ்வாயாக!

நின் காதல்...பெரிதே: நின்னுடைய காதல் திறம் இவ்வளவு பெரிய உலகத்தைப் பார்க்கினும் மிகப் பெரியது.

இயற்கையின் தோற்றமாகிய இவ்வுலகின் இயக்கமும், அதன்கண் நின்று நீடும் உயிர்களின் வாழ்க்கைத் தொடரியக்கமும் மாந்தர் அறிவுணர்வுக் கெட்டாத ஆற்றல் சான்றன. ஆனால் அவற்றினும் நின் காதல் யாராலும் கணித்துக் கூற முடியாத பேராற்றல் வாய்ந்ததாகலின், அஃது இவ்வுலகினும் பெரிது ஆகின்றது.

பொழிந்த விசும்பின் தூய்தே: மழை முகில் கட்டியிருந்து, மழையாக அறப் பொழிந்த பின்னர் உள்ள கலங்கமற்ற வானத்தைப் போலும் நின் காதல் தூய்மையானது.

தூய்மைக்குக் கலங்கமற்ற வானத்தை உவமையாகச் சொன்னாள். வெறுந் தூய்மையான வானம் என்னாது, நிறைந்து மழை பொழிந்த பின்னர் உள்ள மாசற்ற வானத்தை உவமை கூறியது, அதன் குளிர்மையும், அகற்சியும், உயர்வும் கருதி என்க. மேலும் நீலவானம் அன்பின் பெருக்கிற்கு ஓர் அடையாளமும் ஆம். மழை பொழியாத வானம் வறட்சியும் கலங்கமும் உள்ளதென்க.

கதிரின் செவ்விது: சிறிதும் கோட்டமில்லாத ஒளிக் கதிரைப் போலும் செப்பமானது.

மணியின் காழ்த்தது: உறுதியில் வயிரமே வலிதாகலின் அது போலும் வலியது என்றாள்.

பனியின் தண்ணிது: பனியைப் போலும் குளிர்ச்சி மிக்கது.

அறவோர்...அகன்றது: அறம் செய்வார் நெஞ்சினும் அகற்சி சான்றது. அறவுணர்வு உடல், உயிர்க் கட்டுகளைத் தாண்டி அன்பாக விரிந்து, அருளாகப் படர்ந்து நிற்பதாகலின் அகற்சிக்கு அதனை உவமித்து, அதனினும் அகன்றது என்றாள்.

நெறியின்...திண்ணிது: நெறிப் படத் துறந்தவர் தம் உள்ளத்தினும் உறுதி சான்றது. நெறிப்படத் துறவாதார் உள்ளம் உறுதியிழக்குமாதலின் நெறிப்படத் துறந்தார் உள்ளத்தை உவமை கூறினாள் என்க. என்னை? ‘நெஞ்சில் துறவார் துறந்தார் போல் வஞ்சித்து வாழ்வார்’ என்றாராகலின்.

மறவன்...கூரிதே: வில்லாண்மை வல்ல மறவனின் வளைந்தகையில் உள்ள அம்பை விடக் கூரியது தான் கொண்ட குறி தப்பாமல் சென்று தைப்பதற்கு அம்பு கூரியதாக அமைய வேண்டுவது போல, தலைவியும் அவள் கொண்ட காதல் குறியாகிய காதலனைச் சென்று சேர்வதாகிய அவள் அன்புணர்வும் மிகக் கூரியா தாகும் என்றாள். இனி, அதனினும் கூரியது என்றது அம்பு தைப்பது ஒரு பருப் பொருளையோ, ஓர் அஃறிணைப் பொருளையோ என்றிருக்க, இவன் அன்புணர்வாகிய அம்பு தைத்துப் பற்ற வேண்டுவது ஒரு மாந்த உயிரையும், அதன் நுண்பொருளாகிய உள்ளத்தையும் ஆகலின், அதனினும் கூர்மையானது இதுவென்றாள் என்க.

அவன் றன்...நேரிதே: அவன் தான் கொண்ட நெடுவதாகிய குறிக்கு எய்யும் அம்பு செல்லும் வழியினும் நேரானது. அம்பு செல்லும் வழி மிக நேராக அமைவதாகலின் அதனினும் நேரானது என்றாள். என்னை? அன்புணர்வு அவ்வம்புக் குறியினும் நெடிது பாய வேண்டியிருப்பதால், செலவு நோக்கியும் தொலைவு நோக்கியும் அதனினும் நேரிது என்றாள் என்க.

புலவர்...ஆழ்ந்தது: புலவர் தம் தடையில்லாத கற்பனை என்னும் ஆழமான மடுவை விட ஆழமானது. தலைவியின் காதல் உணர்வு புறத்தோர் எளிதே உணரவியலாத அளவிற்கு மிக ஆழமானது என்று குறிப்பிட வேண்டி, அதற்கு ஈடாகத் தடையில்லாத கற்பனை வளஞ்சான்ற புலவர் தம் ஆழமான உணர்வை எடுத்துக் கூறி, அதனினும் ஆழமானது என்றாள். தடையற்ற கற்பனை உணர்வு மேம்பட்ட புலவர்க்கே கைவரப் பெற்றதாகும் என்க.

கொடையருள்......கனிந்தது: கொடையுணர்வு சான்ற அருள் நெஞ்சினும் முழுமையாக மிகவும் கனிந்த உணர்வுடையது. கொடை உள்ளஞ்சான்றவர் தம் புற உடைமைப் பொருள்களையே பிறர்க்கு ஈகஞ்செய்யும் அருள் உணர்வு கொண்டவராய் இருப்ப, இவள் தன்னையும், தன் உயிரையுமே தன் காதலன் பொருட்டு ஈந்தாளாகலின், அவர்தம் உணர்வினும் இவள் காதல் உணர்வு மிகவும் கனிவுடையது என்றாள் என்க.

நிண நீர்ப் பெருக்கி: உணர்வெழுச்சியால் மத நீரைப் பெருக்கி.

முரசுத்தலை செருக்கி: முரசு போலும் திரண்டு பருத்துள்ள தலையை நிமிர்த்தவாறு.

பணைக்கால் அலைத்த: பருத்த கால்களை அலை போலும் அசைத்துக் கொண்டு வரும்.

பருங்கூர்ங் கோட்டின் களிறு: பருத்த கூரிய மருப்புகளை யுடைய ஆண் யானையை.

வீழ்த்திய வரியினும் துணிந்ததே: (அத்தகைய ஆண் யானையைப்) போரிட்டுக் கொன்று வீழ்த்திய வரிப்புலியை விடத் துணிவானது (நின் காதலுணர்வு) என்றாள் என்க.

ஈண்டு, ஆண் யானையும் அதன் மதப் பெருக்கமும் சாதி வேறுபாட்டு உணர்வுக்கு உருவகமாகக் கூறப்பெற்றன. குமுகாயத்தில் மக்களிடையில் வேரூன்றிக் கிடக்கும் சாதியுணர்வானது, ஒரு மதம் பிடித்துத் தலை செருக்கிக் கால்களை அலைக்கழித்து வரும் ஓர் ஆண் யானை போல்வது. அவ்வுணர்வு அடங்கியிருப்பது போல் இருந்து, அவ்வப்பொழுது எழுச்சி கொள்வது, யானையிடத்து அடங்கியிருந்து அவ்வப்பொழுது எழுச்சி கொள்ளும் மதம் போல்வது. மதம்—வெறி. தலை செருக்குதல் என்பது அச்சாதியுணர்வால் பெருமை கூறிச் செருக்குதல். பணைக்கால் அலைத்தல்

என்பது, அச்சாதியுணர்வால் பிற அன்பு, அறம், ஒப்புரவு போலும் மென்மையும் உயர்வும் சான்ற நல்லுணர்வுகள் மிதிக்கப் பெற்று நிலை குலையுமாறு அலைவுறுத்தல் என்றபடி. பருங்கூர்க்கோடு என்பது, பெருமையும் ஆரவாரிப்பும் வன்மையும் கொண்ட சாதி அடையாளங்கள். களிறு என்று சாதியுணர்வை, ஆண் யானையாக உருவகித்தது, பெண்கள் இயல்பாகவே அச் சாதிப் பிரிவுகளைப் பொய்யாக்கும் கலவைக் கூடலுக்கு இசைந்தவர்களாகையால், ஆண்களாலேயே அச் சாதிக்கட்டு வலிப்பெற நின்றது என்பான் வேண்டி என்க. வீழ்த்துதல்—போரிட்டுத் தோல்வியுறச் செய்தல்—அழித்தல்.

தலைவியை வரிப்புலியாக உருவகித்தது, சாதி வேறுபாடு களுடன் அவள் பொருத எழுச்சியையும் முனைப்பையும் காட்ட வேண்டி என்க. ஓர் ஆண் யானையின் எழுச்சியை விடப் புலியின் சீற்றம் வலிதோ என்பார், 'யானைவெரூஉம் புலிதாக்குறின்' என்னும் கருத்தை ஓர்க.

இனி, அவ்வரிப் புலியினும் துணிவானது இவள் காதலுணர்வு என்றது, அவ்வரிப்புலி தன்னைக் காத்துக் கொள்ளவே, அவ் வியானையை எதிர்த்துப் போரிட்ட நிலையில், இவள் தன்னொடு தன் காதலனையும், காக்கவும் மீட்கவும், யானையினும் வலிதாகிய அச் சாதிப் பாகுபாடுகளுடன் புலியினும் துணிவாகப் போரிட வேண்டி யிருந்ததால் என்க.

குலந்தரு..... வளைக்கை: குலங்களால் ஏற்படுத்தப்பெற்ற உயர்வு தாழ்வெனும் பிரிவுணர்வை நிலைகுலையும்படி செய்தது வளையல்களணிந்த நின் கை.

அலர் தலை... அணிகழல்: சாதிகளின் மலர்ச்சியுற்ற தலையை இனி மலர்ச்சியுறாதவாறு, மதித்துச் சிதைத்தது, கழல் அணிந்த நின் கால்.

இழிநோக்கு .. இணைவிழி: சாதிவேறுபாட்டின் இழிவான நோக்கத்தை எரித்துத் தீய்த்தது, தீயை உமிழும் நின் கண் இணைகள்:

தான் கொண்ட காதலில் வெற்றி பெற்றுக் கலப்பு மணம் புணர்ந்து கொண்டாளாதலின், அச்சாதி வேறுபாட்டை, நிலை குலையும்படியும், மிதித்துச் சிதைவுறுமாறும், எரித்துத் தீய்க்கவும் செய்தாள் என்க,

பழியற..... நெஞ்சம்: குலத்தால் வேறுபட்ட இருவரும் மனம் ஒன்றிக், கொண்ட காதல் நிறைவேறுது பொய்க்கும் என்று சாதியுணர்வினர் பேசிய பழிச்சொல்லை இல்லாமற் போகும்படி துடைத்தல் செய்தது, பண்புற்ற நின் நெஞ்சம்.

செங்கால் நாரையின்:—சிவப்பு நிறக் கால்களை உடைய நாரையைப் போல்.

தூங்கியிருந்து—மனம் பதறுமல் காலம் பொருந்தும் வரை அமைந்திருந்து. 'தூங்குக தூங்கிச் செயற்பால' என்றுராகலின்.

நுங்குறி பற்றினே: நுன் குறியாகிய நின் காதலனைக் கைப் பற்றிக் கொண்டனே.

மருட்கை உன் துணிவே: இந்த உன் துணிவு வியப் புடையது.

சான்றவர்......நெஞ்சம்: சான்றோர் மருங்கில் பொருந்தி, அவர்தம் நோக்கினும் போக்கினும் கருத்துக் கொண்ட உள்ளமும்.

தோன்றுயர்......உணர்வும்: உள்ளத்தே தோன்றுகின்ற உயர்ந்த உணர்வின் அடிப்படையாக மலர்ந்த வினைகளில் கட்டப் பெற்றுத் தொங்கிய உள்ளமும்.

தாழ்வறப் பெற்றோன் தடந்தோள்: தாழ்வில்லாமல் அமையப் பெற்றவனின் பருத்த தோளை.

வாழ்வெனப் பற்றி: இதுவே நமக்குற்ற வாழ்வு என இறுகப்பற்றி.

வரைந்தனே கொண்டே: அவனை மணந்து கொண்டனே நீயே!

'தோழியே! இதனைக் கேட்க! நீ என்றும் வாழ்வாயாக; நின் காதல் இவ்வுலகினும் பெரியது; பொழிந்த விசும்புபோல் தூயது; கதிர் போல் செப்பமானது; மணிபோல் உறுதியானது; பனிபோல் குளிர்மையானது; அறவோர் நெஞ்சைவிட அகன்றது; முறைப்படத் துறந்தோர் உள்ளத்தை விடத் திண்ணியது; மறவன் கை அம்பை விடக் கூர்மையானது; அவன் இலக்கை விட நேரானது; புலவரின் கற்பனை மடுவை விட ஆழமானது; கொடை சான்ற உள்ளத்தை விடக் கனிந்தது; யானையை எதிர்த்துப் போரிட்டு வீழ்த்திய புலியைப் பார்க்கினும் துணிவு கொண்டது; நின் வளையல்களணிந்த கை குலப்பிரிவைக் குலைத்தது; நின் கழல் அணிந்த கால் அதன் தலையை மிதித்துத் துவைத்தது; உன் இரண்டு விழிகளும் அதன் இழிந்த கோட்பாட்டை எரித்துத் தீய்த்தன; உன் பண்புடைய நெஞ்சம் அதனுல் வரும் பழியைத் துடைத்தது; செங்கால்களையுடைய நாரையைப்போல் அமைத்திருந்து உன் குறியாகிய கணவனை நீ பற்றிக் கொண்டனே; உன் துணிவு வியப்பானது; சான்றோர் துணை யோடு உயர்ந்த வினைகளில் நாட்டம் கொண்டவனின், பருத்த தோள்களை நீ வாழ்வு இதுதான் என்று விடாமல் பற்றி மணந்து கொண்டனையே' என்று வேறு குலத்தவன் ஒருவனை நயந்து காதலான் மணந்து மனையறம் புகுந்த தலைவியை வாழ்த்தியும் பாராட்டியும் உரைத்தாள் என்க.

இது **முல்லை** என் திணையும், **பாங்கி வாழ்த்தல்** என்னுந் துறையுமாம் என்க.

சோவியத்து நாட்டில் பேசப்படும் மொழிகள் யாவை?

—டி. ககனேவா, டி. கல்பசாவா.

[சோவியத்து அறிவியல் பேரவையின்
மொழி இயல் துறை ஊழியர்கள்]

சோவியத்து நாட்டின் அனைத்துத் தேசிய இனத்தவர்களும், ஏறக்குறைய 130 வேறுபட்ட மொழிகளில் பேசுகின்றனர். ஒரு குறிப்பிட்ட மொழியைப் பேசுவோரின் எண்ணிக்கை சில நூறு களிலிருந்து 130,000,000 வரை உள்ளது. எடுத்துக்காட்டாக தாகெசுத்தானிலுள்ள சினுக் மொழியைச் சில நூறு பேரும், உருசிய மொழியை 130,000,000 பேரும் பேசுகின்றனர்.

1970-ஆம் ஆண்டின் புள்ளிவிளத்தப்படி, 13,000,000-க்கு மேலான உருசியர்கள் அல்லாதவர்கள், உருசிய மொழியைத் தங்கள தாய் மொழியாகப் பதிவு செய்துள்ளார்கள். ஏறக்குறை 42,000,000 உருசியன் அல்லாத, பிற தேசிய இனத்தவர்கள் உருசிய மொழியை நன்கு அறிந்திருப்பதால் சோவியத்து நாட்டில் எல்லாத் தேசிய இனத்தவர்களிடையேயும் தொடர்பு மொழியாக உருசியன் விளங்கு கிறது.

சோவியத்து நாட்டில் உள்ள ஆர்மேனிய, சியார்சிய, உருசிய, தாசிக் முதலிய மொழிகளுக்குப் பண்டைய எழுத்து வடிவங்கள் உள்ளன. லத்விய, லித்துவேனிய, எசுத்தோனிய மொழிகள், நூற்றுண்டுகளுக்கு முன்புதான் எழுத்து வடிவம் பெற்றன. அதேபோதில், அபாசினியன், அவார், இன்சுகு, மான்சி போன்ற மொழிகள் சோவியத்து ஆட்சிக் காலத்தில்தான் எழுத்து வடிவம் பெற்றன. சோவியத்து நாட்டின் எல்லா மொழிகளும் சம உரிமை உடையன வாகும்.

தோற்றம்

சோவியத் நாட்டின் தேசிய இன மொழிகள் அனைத்தும், இந்தோ-ஐரோப்பிய, அல்தாய், ஐபீரிய-காகசு, யூரல், பழங்கற்கால-ஆசியா ஆகிய ஐந்து மொழி குடும்பங்களிலிருந்து தோன்றியவை யாகும்.

இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தில் சிலாவிக், இரான், பால்டிக், ரோமன்சு, செர்மானிக், இந்திக் மொழிக் குழுக்களும், தனிப் பிரிவாக விளங்கும் ஆர்மேனிய மொழியும் சேர்ந்தவையாகும்.

சோவியத்து நாட்டில் மிகவும் பரவலாக விளங்கும் மொழி களான உருசிய, உக்ரேனிய, பைலோ உருசிய மொழிகள் அனைத்தும் கீழை-சீலாவிய துணைப் பிரிவைச் சேர்ந்தவையாகும். சோவியத்து நாட்டின் மக்கள் தொகையில் நான்கில் மூன்று பகுதியினர், உருசிய, உக்ரேனிய, பைலோ மொழிகளில் பேசுகின்றனர். இரானிய மொழிப்

பிரிவைச் சேர்ந்த மொழிகள் உள்பட பல மொழிகள் சோவியத்து நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் பரவியுள்ளன. தாசிக் மொழி, தாசிக் குடியரசில் மட்டுமல்லாது, உசுபெக்கிசுத்தான், காசகிசுத்தான், கிர்கீசியா ஆகிய குடியரசுகளில் சில பகுதிகளிலும் பேசப் படுகிறது. அசதிய மொழியானது, தென் அசதிய தன்னுட்சிப் பகுதியிலும் பேசப்படுகிறது. குர்திசு மொழி பேசும் பலர், ஆர்மேனியக் குடியரசிலும் வாழ்கின்றனர். அசர்பைசானிலும், துர்க்மேனியாவிலும், சியார்சியாவிலும் கூட குர்திசு மக்கள் வாழ் கின்றனர். தாத் மொழி, அசர்பைசானிலும் தாகெசுத்தானிலும் முகாமையாகப் பேசப்படுகிறது.

பால்டிக் பிரிவைச் சேர்ந்த லித்வேனிய, லாத்விய மொழிகள் பால்டிக் குடியரசுகளில் பேசப்படுகின்றன.

மல்தேவியக் குடியரசில் பேசப்படும் மால்தேவிய மொழி, ரோமன்சு மொழிக் குழுவைச் சார்ந்ததாகும்.

மேற்கூறிய மொழிகள் எவற்றுடனும் சேராமல் தனித்து இயங்கும் ஆர்மேனிய மொழியானது, இந்தோ-ஐரோப்பிய மொழி களின் குடும்பத்தில் ஒரு பிரிவாக விளங்குகிறது.

செர்மானிக் மொழிப் பிரிவைச் சேர்ந்த இத்திசு என்னும் இந்தோ-ஐரோப்பிய மொழி, 17.7 விழுக்காடு சோவியத்து யூதர் களால் பேசப்படுகிறது. 70.8 விழுக்காடு சோவியத்து சிப்சிகள், இந்திக் பிரிவைச் சேர்ந்த சிப்சி மொழியில் பேசுகிறார்கள்.

துருக்கிய, மங்கோலிய, துங்கூசிய மொழிகள், அல்தாய் குடும்பத்தைத் தழுவியனவாகும்.

ஐந்து முகாமைப் பிரிவுகள்

நிலக்கோளவியல்படி துருக்கிய மொழிகள், 5 முகாமைப் பிரிவு களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. முதல் பிரிவில் மேற்கு லித்வேனியப் பகுதிகளிலும், கிரிமியா உள்பட உக்ரேனிலும், தெற்கு மல்தாவி யாவிலும் பேசப்படும் (முகாமையாக ககாசு, கராயிம், உரும்) மொழிகள் ஆகியவை அடங்கும்.

காகசசில், அஃதாவது அசர்பைசான், குமிக், கரசாய்-பல்கார், நொகாய் ஆகிய பகுதிகளில் வாழும் மக்களின் மொழியும் துருக் மேனிய மொழியும் இரண்டாவது பிரிவைச் சார்ந்ததாகும்.

ஓல்கா, யூரல் பகுதிகளில் வாழும் மக்களால் பேசப்படும் ததார், பசுகிர், சுவாசு மொழிகள், மூன்றாவது பிரிவைச் சாரும்.

நடு ஆசியா, காசக்த்தானைச் சேர்ந்த உசுபெக், காசக் துர்க்மீனிய, கிர்கீசிய, கரகல்பாக், உக்யூர் மொழிகள் நான்காம் பிரிவைச் சார்ந்தனவாகும்.

(தொடர்ச்சி 38-ம் பக்கம் பார்க்க)

என் இலங்கைச் செலவு.

பெருஞ்சித்திரனார்.

10. இலங்கை வரலாற்றுப் பின்னணி!

பழந்தமிழ் நாடு, செந்தமிழ்நாடும் கொடுந்தமிழ்நாடும் என இரு பிரிவாகப் பிரித்து பேசப் பெற்றது. அவற்றை மருவிச் சூழ்ந்துள்ள நாடுகள் பதினேழு என்று குறிக்கப் பெற்றுள்ளன. அவற்றைக் கீழ்வரும் பழம் பாடலால் அறியலாம்.

சிங்களம் சோனகம் சாவகம்
சீனம் துளுக்கடகம்
கொங்கணம் கன்னடம் கொல்லம்
தெலுங்கம் கலிங்கவங்கம்
கங்கம் மகதம் கவுடம்
கடாரம் கடுங்குசலம்
தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதி
னேழ்புவி தாமிவையே!

ஈழம் என்பது சிங்களத்தின் மறு பெயராகும் என்பது, இலக்கண விளக்கம் 'செந்தமிழ் நிலஞ்சேர்' என்னும் நூற்பா வுரையால் அறியப்படும்.' சிங்களம்' என்னும் பெயர், சிங்கவாகுவின் மகன் விசயன், தன் தந்தையின் பெயரடிப்படையாகக் கொண்டு அமைத்ததென்பது பொருந்தாது. சிங்கவாகுவின் மகன் இலங்கைக்கு வந்தது இன்றைக்கு ஏறத்தாழ 2500 ஆண்டுகளுக்கு முன். ஆனால் இன்றைக்கு ஏறத்தாழ 5000 ஆண்டுகளுக்கு முன் உள்ள பாரதத்தில் **சிங்களம்** என்னும் பெயர் வந்துள்ளது. இப்பெயர் அங்குப் பேரளவில் விளையும் கறுவாப்பட்டையால் வந்தது என்பதே பொருந்துவதாகும். இலக்குமன் இராமச்சந்திர வைத்திய பண்டிதர் என்பார் எழுதிய சமற்கிருத-ஆங்கில அகர முதலியில் சிங்களத்துவீபம் என்பதற்குப் **பட்டைத்தீவு** என்றே பொருள் தரப் பெற்றுள்ளது.

இனி, சிங்களம் என்னுஞ் சொல்லால் இந்நாடு குறிக்கப் பெறுவதை விட, **இலங்கை, ஈழம்** என்னுஞ் சொற்களால் தமிழ் இலக்கியங்களில் குறிக்கப் பெறுவதே பெருவழக்காக உள்ளது.

'தொல்லிலங்கை கட்டழித்த	—சிலப். 2.35:3.
'பெருமா விலங்கை'	—புறம்: 176-6.
'இலங்கைக் கிழவோன்'	— புறம்: 379-6.
'தொல்மா விலங்கை'	—சிறுபாண்-119.
'இலங்கையில் எழுந்த சமரம்'	—சிலப்.26-238.
'ஈழத்துணவு'	—பட்டிணம்-191.
'ஈழம்'	முத்தொள்.26-3.

முதலிய குறிப்புகளால் இதனை உணரலாம். இவ்வாறாகப் பல வகை இலக்கியக் குறிப்புகளாலும், பற்பல வரலாற்றுக் குறிப்புகளாலும், இலங்கைக்கும் சிங்களவர்க்கும் உள்ள தொடர்பை விட அல்லது உரிமையை விட, அதற்கும் தமிழர்களுக்கும் உள்ள தொடர்பே மிகுதி என்று நிலைநாட்டலாம். சேர மண்டிலம், சோழ மண்டிலம், பாண்டிய மண்டிலம், தொண்டை மண்டிலம் என்று மண்டிலப் பெயர் கொண்டு வழங்கும் நாடுகளுள் ஈழ மண்டிலம் என்பதும் ஒன்றாகப் பண்டைத் தமிழ் நூல்களில் குறிக்கப் பெறு கிறது.

விசயன் இலங்கைக்கு வந்த கி.மு. 543க்குப் பன்னெடுங் காலத்துக்கு முன்பிருந்தே, அந்நாடு தமிழ் மக்கள் குடி கொண்டிருந்த நாடாக இருந்தது என்பர் **பெர்டோலாக்கி (Bertolacei) பென்னட் (Bennet)** ஆகிய ஐரோப்பிய வரலாற்றாசிரியர்கள். அந்நாட்டில் வழங்கும் பல ஊர்களின் பெயர்கள் இன்றும் தூய தமிழ்ப் பெயர்களாகவே விளங்குகின்றன. எடுத்துக்காட்டாக பாலாவி, மாதோட்டம், மாந்தை, சிலாபம், குசலை, உடைப்பு, ஆனைமடு பள்ளம், கற்பிட்டி, குதிரை மலை, வில்பற்று, முசலி, மன்னார், மூதூர், கந்தளாய், பன்குளம், திறப்பனை, குச்ச வெளி, நிலா வெளி, பச்சிலைப் பள்ளி, கரைச்சிக் குடியிருப்பு, முள்ளிய வளை, குமணை, உகந்தை, அம்பாறை, நல்லூர், அரிப்பு, வெருகல் (ஆறு), பருத்தித் துறை, புத்தளம், வதுளை, கண்டி, கதிர்காமம், கொழும்பூ (இதுவே பின்னர் கொழும்பு என்றானது), சிலாத்துறை, சுண்ணாகம், செம்பியன் பற்று, ஆனையிறவு, கிளிநொச்சி, முல்லைத் தீவு, மண்டைத் தீவு, வேலணை, காரைத் தீவு, எழுவைத் தீவு, அனலைத் தீவு புங்குடு தீவு (இதுவே பொன் கொடு தீவு என்பதன் மருவாதல் வேண்டும்) நெடுந் தீவு, பாலைத் தீவு, மாங்குளம், அருவியாறு, ஆனைமேடு, களுத்துறை, அலம்பில், வப்பு வெளி, செங்கலம், மீகோட்டை முனை, பொலனறுவை மட்டக்களப்பு, தும்பளஞ்சோலை, அக்கரைபற்று, வெளிமடை, அப்புத்தளை, வெல்லவாய், புத்தளை, கருக்குப்பனை, முந்நூல், அறுகம் குடா, அம்பாந் தோட்டை, தேவுத்துறை, பாணன்துறை, கமம், முதலிய பரலலான எண்ணிறந்த ஊர்கள் தூய தமிழ்ப் பெயர்களே! மேலும் இவற்றுள் பல பெயர்கள் பண்டைக் காலந்தொட்டே அங்கு வழங்குகின்றன. தேவாரத்தில் பாலாவி, மா தோட்டம், மாந்தை, திரிகோணமலை, திருக்கேதீச்சுரம் முதலிய பெயர்கள் குறிக்கப் பெறுகின்றன. இலங்கையில் பண்டையில் ஆண்ட சோழ, பாண்டிய அரச வழியினர் மாதோட்டத்தில் கட்டியிருந்த கோட்டை மிக்க வலிமையும் அழகும் வியப்பும் உடையதென்றும், பெருமாக்கலங்கள் மன்னார் கடலில் வருமாயின் அவற்றைத்தன்பால் இழுத்துக்கொள்ளும் காந்தப் பொறியுடையதாய் இருந்ததென்றும் கூறுவர். (பார்க்க: தமிழ்ச் சங்கமும் ஈழநாடும்—கட்டுரை—செந்தமிழ் தொகுதி 8-பகுதி 10). உரோமர் இலங்கையிலே வாணிகம் செய்த காலத்திலேயே,

தமிழர் மாதோட்டத்தைத் தலைநகராகக்கொண்டு அரசு செய்தார்கள் என்னும் செய்தி குறிக்கப் பெறுகிறது. (Jaurnal of the Royal Asiatic Society-Ceylon Branch. 1848. p. 73)

மேலும் பண்டைய நாகர்களுக்கும இலங்கைக்கும் பெருந் தொடர்பு இருந்திருக்க வேண்டும் என்றும் கருதப் பெறுகிறது. நாகர்கள் பழந்திராவிடர்கள். இராவணன் நாகர்கள் மரபில் வந்த வனே என்பர். ஒரு காலத்தில், நாகர்கள் இலங்கையிலிருந்து இமயம் வரை ஆட்சி செய்தனர் என்பதற்குப் பல வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. இலங்கை விசயனால் ஆளப்படுவதற்கு நெடுங் காலத்திற்கு முன்னரே, அங்கிருந்த அரசர்கள் நாகராயர் என்னும் பெயரைப் புனைந்திருந்தனர் என்றும் தெரிய வருகிறது (Sketches of Ceylon History). இலங்கையிலும் தமிழகத்திலும் நாகபுரம் நாகர் கோயில், நாகப்பட்டினம் முதலிய பெயர் கொண்ட பல ஊர்கள் இன்றும் உண்டு. ஒரு காலத்தில் யாழ்ப்பாணம் சிங்கள வர்களால் **நாகத்தீவு** என்றே வழங்கப்பட்டுள்ளது. பின்னர் அரசிழந்த நாகர்கள் ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில் விந்தனைப் பகுதியிலும் நயினார் தீவிலும் போய் ஒதுங்கியிருந்தார் என்பர். மேலும் முதற்கழகப் புலவர் **முடிநாகராயர்** என்பாரும், ஈழத்துப் பூதந் தேவனார் என்பாரும், இறையனாரகப் பொருளுரையைப் பாடங் கேட்ட **இளநாகர்** என்பாரும், அவர் மாணவர் **நீலகண்டனாரும்** ஈழநாட்டுப் புலவர்களாதல் வேண்டும் என்று அறிஞர் பலர் கருதுவர். யாழ்ப்பாணத்துக்கு **மணற்றி** என்றொரு பெயரும் உண்டு. இன்னும் மாந்தையிலும், மணற்றியிலும் பாண்டியர் போர் புரிந்து பெற்ற கொற்றமும் இறையனார் அகப்பொருட் கோவையிற் கூறப் பெறுகின்றது. மாந்தை என்பது மாதோட்டத்துக்கு அண்மையில் உள்ள ஊர். மணற்றி என்பது மணல் மேடு என்றும் மணற்றிடல் என்றும் ஒரு காலத்தில் வழங்கப் பெற்றதாகத் தெரிகிறது. இஃதொரு காலம் இலங்கையரசர் பாண்டியரொடும் சோழரொடும் பொருந்திய போர்க்களமாக விருந்தது. இதன் பகுதிகளுள் ஒன்று இன்றும் **களபூமி** என்னும் பெயரால் வழங்கும். மாந்தையிலும் மணற்றியிலும் கி.மு, 103-இல் ஒரு பெரிய போர் நடந்ததென்றும், அப்போரில் பாண்டியர் வாலகம்பாகுவைப் புறங்கண்டு அவன் மனைவியையும் புத்த கலத்தை(பாத்திரத்தை)யும் கவர்ந்து கொண்டு போனதுடன், ஈழநாட்டையும் தமதடிப்படுத்திப் போயினர் என்றும் **மகாவம்சம்** கூறுகிறது.

"இன்னும் சிலப்பதிகார உரையாசிரியர் **அடியார்க்கு நல்லார்** ஈழ நாட்டார் எனப்படுவார். அவர் குணபூசன சிங்காரிய அரசர்க்கு அமைச்சராயிருந்து, ஈழநாட்டில் பல அறச்சாலைகளும், கல்விக் கூடங்களும் அமைத்தார். அஃது **அடியார்க்கு நல்லார் குளமென** வழங்குகின்றது. அது வண்ணைச் சிவன் கோவில் சந்நிதித் தெருவில் உள்ளது. அதற்கயலிலே அவர் தம் அரசன்

பெயராற் அமைப்பித்த குளம் **ஆரியகுளம்** என இக் காலத்து வழங்குகிறது. அவர் இருந்த மனைநிலமும் அவர் பெயராலேயே வழங்குகின்றது. அவர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் தமிழர் மிகப் பேரளவில் இருந்தனர். அவரே அறுபத்து மூன்று நாயன்மார்களும் கோவிலும், பூசைக் கட்டளையும் யாழ்ப்பாணத்தில் வகுத்தவர். அக் கோவில் இருந்த இடம் **'நாயனமார்கட்டு'** என்று இன்றும் வழங்குகின்றது. அடியார்க்கு நல்லார் நிரம்பை என்னும் ஊரில் பிறந்தவர். (தமிழ்ச் சங்கமும் ஈழநாடும்—கட்டுரை. 'செந்தமிழ்' தொகுதி 8; பகுதி 10)

மேலும், யாழ்ப்பாணத்திலுள்ள செம்பியன் பற்று, பல்லவ ராயன்கட்டு, தொண்டைமாறு, பாண்டியன் தாழ்வு முதலிய இடப் பெயர்களை நோக்குமிடத்துத் தமிழ்நாட்டு வேந்தர்கள் யாழ்ப்பாணத் தொடர்புடையவர் களாயிருந்தனர் என்பது நன்கு துணியப்படும். இன்னும் மாதோட்டத்துக்குத் தெற்கேயுள்ள குதிரை மலை மிக்க பழமையும், யவன நாடுவரையும் பரந்த புகழும் உடையது. அஃதொரு காலம் சிற்றரசருள்ளே எழினியும் பிட்டங்கொற்றனும் புற நானூற்றில் பாடப் பட்டோராவர். (மேற்படி கட்டுரை.)

இவ்வாறான பல இலக்கிய வரலாற்றுச் செய்திகளால், இலங்கையைத் தொடக்கத்தில் தமிழினத்தவரின் முன்னோர்களே ஆண்டிருந்தனர் என்பதும், இடையில் கி.மு. 5 அல்லது 6-ஆம் நூற்றாண்டளவிலேயே ஆரிய இனத்தவரான சிங்களவர்கள் வட இந்தியாவினின்று வந்து அங்குக் குடியேறித் தமிழ அரசர்களுடன் சண்டையிட்டு அந்நாட்டைக் கைப்பற்றினர் என்பதும், அதன் பின்னரும் அந்நாடு தமிழர் கைக்கும் சிங்களர் கைக்கும் மாறி மாறி ஆட்சிக்கு வந்தென்பதும், இறுதியில் கி.பி. 1070 வரை இலங்கை முழுவதும் இராசேந்திர சோழனால் ஆளப்பெற்றதென்பதும், அதன் பின்னரே போர்த்துக்கீசியர் அதனைக் கைப்பற்றி ஆண்டனர் என்பதும் தெரிய வருகின்றன.

இவ்வகையில் இலங்கைக்கும் தென்னிந்தியாவிற்கும் நெருங்கிய கலை, பண்பாட்டு, சமய, குமுகவியல், மாந்த உறவுகள் உண்டு என்று வரலாற்றுப் பேராசிரியர் பலரும் அறுதியிட்டுக் கூறு கின்றனர். இதற்கான அகப்புறச் சான்றுகள் வடமொழி, பாளி, தமிழ் ஆகிய மும்மொழி இலக்கியங்களிலும் பரந்து கிடக்கின்றன.

(தொடரும்)

புகழின் மயக்கம்

"புகழுக்கு மயங்கி விடாமல் தப்புவதற்கு ஒரே வழி பணி செய்து கொண்டே இருப்பதுதான். அப்பணிகளை நிறுத்தி விட்டுப் புகழை நாடுவதிலும் இயற்கை இன்பங்களை நுகர்வதிலும் மனம் ஈடுபடலாம். ஆனால் இவற்றைப் புறம் தள்ளி விட்டுப் பணிபுரிதல் ஒன்றே வழி. பணி-அதுவன்றி வேறில்லை".—ஐன்சுடைன்.

தமிழ்ப்பண்பாட்டின் தனிச்சிறப்புகள்!

பண்டைத் தமிழரின் வானநூலறிவு

—பன்மொழிப்புலவர். **இரா. மதிவாணன்.** க.மு

மண்ணில் மக்களின் நடப்புக்கும் விண்ணில் கோள் மற்றும் நாண்மீன்களின் இருப்புக்கும் ஒரு தொடர்பு இருப்பதாகப் பழந் தமிழர் கருதினர். பொது மக்கள் தீமை செய்வராயின் அரசன் தண்டிப்பான். அரசனே தீமை செய்யும் கொடுங்கோலனுயின் விண்ணிலுள்ள கோள்கள் நிலை திரியும்; மழை பெய்யாமல் நாடு கெடும்.

கோன்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்
கோள்நிலை திரியின் மாரி வறங்கூறும்
மாரிவறங் கூரின் மன்னுயிர் இல்லை

வேள்வி செய்யாவிடினும் ஆரியப் பார்ப்பனர்களைப் போற்றுவிடினும் மழை பெய்யாது என்பது ஆரியரின் பண்பாடு. மக்களைக் காக்கும் பொறுப்பிலுள்ள ஆட்சித் தலைவர்கள் முறை கெட்டு நெறி தவறினுல் மழை பெய்யாது என்பது தமிழரின் பண்பாடு.

முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்

என்று வள்ளுவப் பெருந்தகையும் இக்கருத்தை வற்புறுத்திக் கூறுகிருர். இத்தமிழர் பண்பாடு ஓங்கியிருந்த காலத்தில் ஆளும் பொறுப்பேற்ற தமிழ் மன்னர் அனைவரும் முறை தவருது அற நெறி நிற்க வேண்டியவராயினர். ஆரியப் பண்பாடு புகுந்தபின், பார்ப்பனர் நலனே மக்கள் நலன் என்னும் கருத்து வலுப்பெற லாயிற்று. பொது மக்கள் அனைவரையும் ஒப்பு நோக்கி உயிராக மதித்த தமிழ் மன்னர்கள் மரபு மறந்து ஆரியப் பார்ப்பனர்க்குச் சிறப்பிடம் தந்தனர். அதனுல் தமிழ்ப் பண்பாடு சிறப்பிழந்தது. தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சி தளர்ச்சியில் ஆளும் பொறுப்பிலுள்ள வர்க்குப் பெரும்பங்குண்டு என்பதை அவர்கள் ஏனோ மறந்தனர்.

மக்களின் பண்பு நிலைகளுக்கு ஏற்ப விண்ணிலுள்ள கோள்கள் நிலைமாறும் என்னும் வான நூற் கண்டுபிடிப்பு தமிழரின் தனித்

ஆய்வின் தொடக்கம்

ஐன்சுடைன் சிறுவனுயிக்கும் போது ஒரு சமயம் நோய் வாய்பட்டார். படுக்கையிலிருந்த அவரிடம், அவர் தந்தை ஒரு காந்த ஊசி (திசை காட்டி) கொடுத்தார். அதன் முனைகள் வடக்கு தெற்காக நிற்பது ஏன் என்று கேட்டார். தந்தையின் விடை அவருக்கு நிறைவளிக்கவில்லை. "இல்லை, இதற்கு மேல் ஒரு மறை பொருள் இருக்க வேணடும்" என்ருர். இந்த நுண்ணுணர்வே அவரை அறிவியல் ஆய்வுக்கு வழி நடத்தியது.

திறனையும் தனிப்பாங்கையும் காட்டுவதாகும். மழை வளந்தரூஉம் கற்பினள் என்று மகளிர் பாராட்டப்பட்டனர். வேள்வியிற் சொரியப் படும் அவியுணவு விண்ணகத்தை மகிழ்விக்கும் என்பது ஆரியக் கோட்பாடு. மண்ணக மக்களின் மனப்பாங்கின் செம்மை விண்ண கத்தை மகிழ்விக்கும் என்பது தமிழரின் கோட்பாடு.

மாந்தரின் மனப்பாங்குகளை அவர்களாக வெளிப்படுத்திக் காட்டினாலன்றி அறிதலரிது. ஆயின் விண்ணக நாண்மீன்களும் கோள்மீன்களும் வருங்காலத்தை ஒளியாமல் காட்டுகின்றன என்று கணியர்கள் கருதினர். அதனாற்றான் பிறப்பியம் (சாதகம்) கணிப்பது அவர்களின் தொழிலாக இருந்தது.

தொல்காப்பியர் கூறும் வான நூற் கருத்து

தொல்காப்பியர் பாடாண்டிணைக்குரிய துறைகளைக் குறிப்பிடும் போது,

அச்சமும் உவகையும் எச்ச மின்றி
நாளும்புள்ளும் பிறவற்றி னிமித்தமும்
காலங் கன்னிய ஓம்படை.........

(தொல். புறத்திணை 6)

என்னும் வரிகளில், வானத்துக் கோள்நிலை மீன்நிலைகளால வரும் நன்மை தீமைகளைச் சுட்டிக் காட்டுகிறார். நாள் நிமித்தத்தால் பாடாண் தலைவர்க்குத் தோன்றிய தீங்கு கண்டு அஞ்சிய அச்சமும் அது பிறத்தற்குக் காரணமாகிய அன்பும் ஒழிவின்றிப் பரிசிலர்க்கு நிகழ்தலின் பாதுகாவல் கூற்றாக ஓம்படை பாடுவது மரபு.

ஒருவன் பிறந்த நாள்வயின் ஏனை நாள் பற்றிப் பொருந்தாமை பிறத்தலும், அவன் பிறந்த நாள் மீனிடைக் கோள்மீன் கூடிய வழி அவன் நாள் மீனிடை தீது பிறத்தலும் போல்வன நாளின்கண் தோன்றிய நிமித்தம். புதுப்புள் வருதலும் பழம்புட் போதலும் பொழுதன்றிக் கூகை குழறலும் போல்வன புள்ளின் கண் தோன்றிய நிமித்தம். ஓர்த்து நின்றுழிக் கேட்ட வாய்ப்புள்ளும் ஓரிக் குரலுள்ளிட்டனவும், கழுதுடன் குழீஇய குரல் பற்றலும், வெஞ்சுடர் மண்டிலத்துக் கவந்தம் வீழ்தலும், அதன் கண் துளை தோன்றலும்

அறிவின் துள்ளல்

பல்தொழில் பள்ளியில் படிக்கும்போது ஆசிரியர்களிடம் அடிக்கடி ஏதாவது ஐயம் கேட்பார் ஐன்சுடைன். பல நேரங்களில் அவர்கள் சரியான விடைசொல்லத் தெரியாமல் தவித்தனர். அது கண்டு மாணவர்கள் சிரிக்கத் தொடங்கினர். எனவே ஆசிரியர்கள் அவரை வகுப்பை விட்டு வெளியே போகச் சொல்வர். "நான்என்ன தவறு செய்தேன்" என்பார் ஐன்சுடைன். "நீ இங்கிருப்பதால் அமைதியாகப் பாடம் நடப்பதில்லை" என்று மழுப்புவர் ஆசிரியர்.

தண்சுடர் மண்டிலம் பகல் நிலவெறித்தலும் போல்வன பிறவற்றுக் கண் தோன்றிய நிமித்தம்.

பகற்காலத்தில் நிலவு ஒளி வீசுதலும் சூரியனில் துளை (கரும் புள்ளி) தோன்றலும் தமிழிலக்கியங்களில் குறிப்பிடக் காணுமையின் இத்தகைய நிமித்தங்கள் மிகப் பழங்காலத்தில் நிகழ்ந்தனவாதல் வேண்டும். இவை வானநூலறிவின் தொன்மையைக் காட்டுவன எனலாம்.

நின்று நிலைஇயர் நின் னுண்மீன் நில்லாது
படாஅச் செலீஇயர் நின் பகைவர் மீனே (புறம்-24)

என்று மாங்குடி மருதனுர் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை வாழ்த்தியது அவன் நாளிற்கு ஓர் இடையூறு கண்டு அஞ்சி அன்பால் ஓம்படை கூறியது. தமிழ்ப்புலவர் பலரும் ஓரளவு வானூனலறிவு பெற்றிருந்தனர் என்பதற்கு இப்பாடல் சான்ருகும்.

ஆடியல் அழற் குட்டத்து
ஆரிரு ளரையிரவின்
... ...
... ...
கனையெரி பரப்பக் காலெதிர்பு பொங்கி
ஒருமீன் விழுந்தன்ருல் விசிம்பினுனே
... ...
... ...
அஞ்சினம் எழுநாள் வந்தன் றின்றே (புறம்-229)

இப்பாடல் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை இறப்பான் என அஞ்சி, கூடலூர் கிழார் பாடியதாகும். இப்பாடலில் பாடாண் தலைவனின் நாள்மீனை வீழ்மீன் நலிந்தமை கூறப்பட்டுள்ளது.

இருமுந்நீர்க் குட்டமும்
வியன்ஞாலத் தகலமும்
வளிவழங்கு திசையும்
வறிது நிலைஇய காயமும் என்ருங்கு
அவையளந்தறியினும் அளத்தற் கரியை
... ...
புதுப்புள் வரினும் பழம்புட் போகினும்
விதுப்புற வறியா ஏமக் காப்பினை (புறம்-20)

இசைஞராகவும்......

ஆறு அகவையிலேயே நரம்பியம் (வயலின்) இசைக்கத் தொடங்கினுர் ஐன்சுடைன். இசை அவருக்குப் பொழுது போக்காகவோ, மனச் சலிப்புக்கு மாறுதலாகவோ மட்டும் பயன்படவில்லை. அவரது ஆழ்ந்த எண்ணத்தின் தொடர்ச்சியாய் அவர் தம் ஆழ்மனத்தின் துணை கொண்டு தீர்க்கவியலாச் சிக்கல்களை முடிச்சவிழ்க்கப் பயன்பட்டது.

என்னுங் குறுங்கோழியூர் கிழாரின் பாடலில் கடல், வானம், காற்று வீசும் பருவம் ஆகியவற்றையும் பறவைகளின் வலசை (இடப் பெயர்ச்சி) குறித்தும் ஆராயப்படும் அறிவுக் கலைகள் பழந் தமிழகத்தில் வளர்ந்திருந்ததை அறிகிறோம்.

வடா அது பனிவடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்
கீழது முப்புண ரடுக்கிய முறைமுதற் கட்டின்
நீர்நிலை நிவப்பின் கீழும் மேலது
ஆனிலை யுலகத் தானும்... (புறம்-6)

இப்பாடலில் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பாட வந்த காரிகிழார் மண்ணுலகம் முதல் விண்ணுலகுக்கும் மேலதாகிய ஆனிலையுலகம் (கோலோகம்) வரை நின் புகழ் பரவுவதாக என வாழ்த்துகிறார் அண்ட வெளிக்கும் உலகுக்கும் உள்ள தொடர்பை முப்புணரடுக்கு என்கிறார்.

செஞ்ஞாயிற்றுக் செலவும் அஞ்ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்
வளிதிரிதரு திசையும்
வறிது நிலை இய காயமு மென்றிவை
சென்றளந் தறிந்தோர் போல வென்றும்
இனைத்தென் போரும் உளரே (புறம்-30)

இப்பாடலில் சோழன் நலங்கிள்ளியைப் பாடிய உறையூர் முது கண்ணன் சாத்தனார் வானகத்துக் கோள்களையும் நிலவுலகத்துக் காற்று மண்டிலங்களையும் அவற்றின் இயக்கங்களையும் அவற்றுக் குரிய கால அளவையும் அளவிட்டறியும் வானநூல் வல்லுநர் தமிழகத்தில் இருந்ததை விரித்துரைக்கிறார்.

அண்டத்திலுள்ளதே பிண்டம்
பிண்டத்திலுள்ளதே அண்டம் (சட்டமுனி-ஞானம்)

என்னும் தமிழ்ச்சித்தரின் கருத்துகள் அணுவிலுள்ளதே அண்டத் திலுமுள்ளது என்பதைக் காட்டுகிறது. பழந்தமிழரின் வான்

அலைவிலும் அமைதி

ஒரு சமயம் ஐன்சுடைனின் நண்பர் ஒருவர் ஐன்சுடைனைக் காண அவரது வீட்டிற்குச் சென்றபோது, சமையலறையிலிருந்து கிளம்பிய புகை மண்டிலத்திற்கிடையில் முன்னறையில் அமர்ந்து ஒரு கையில் தம் குழந்தை தூங்கிக் கொண்டிருந்த தொட்டிலை ஆட்டிக் கொண்டு வெளியிலிருந்து வந்த ஆரவாரங்களுக்கிடையில் அமைதியாக இன்னொரு கையில் ஒரு பொத்தகத்தை வைத்துப் படித்துக் கொண்டிருந்தாராம்.

தொடர்—5

ஆண்களுக்கு ஏற்படும் பாலியல் கோளாறுகள்:

மருத்துவ அறிஞர்: **கோ. கோவிந்தனுர்.**

நாட்பட்ட அழற்சிக்கு மருத்துவம், கடுமையான அழற்சிக்கு செய்யப்பட்ட மருத்துவம் போன்றதே. ஆனுல் மருத்துவத்தைப் பலகாலம் நீடித்துச் செய்ய வேண்டும். சில வேளைகளில் பத்து பதினைந்து, முப்பது, நாற்பது ஆண்டுகள் கூட இந் நோயுடன் போராட வேண்டி வரும். தன்னுல் இயன்ற அளவு ஊக்கத்துடன் இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். மிகுந்த ஓய்வு வேண்டற் பாலது. காற்ருேட்டம் உள்ள இடத்தில் தூங்க வேண்டும். தண்ணீரை மிகுந்த அளவில் பருக வேண்டும். வேளைப்படி, குறித்த நேரத்தில், நல்ல உணவு உட்கொள்ள வேண்டும். உணவில் புதிய பழங்களும், காய்கறிகளும் இடம் பெற வேண்டும். வேண்டுமளவு உடற்பயிற்சி செய்ய வேண்டும். மிகுதியாக உடற்பயிற்சியோ, மிகுதியாக வேலையோ செய்யக் கூடாது. நோயாளி இந் நோயைப் பற்றியே நினைந்து நினைந்து மனத்தை அலட்டிக் கொள்ளக் கூடாது. மருத்துவம் தொடங்கி மூன்று மாதங்கள் வரை எவ்வகை முன்

(முன்பக்கத் தொடர்ச்சி)

நூலறிவு விரிந்த மனப்பாங்கையும், தெளிந்த வாழ்வியல், நெறியையும் அவர்களுக்குப் புகட்டியுள்ளது.

வானத்துக் கோள் நிமித்தங்களுக்கு அக்காலத்தமிழர் அடிமைகளாகி மூடநம்பிக்கைகள் வளரவும் இடந்தரவில்லை. வானத்தில் தீய கோள் நிமித்தம் தோன்றியும் கூட தீமை நிகழாமல் நல்லனவாக நடந்ததைக் கண் கூடாகக் கண்டிருக்கின்றனர். அத்தீ நிமித்தம் உலகின் பிறபகுதி மக்களுக்கு வரும் தீங்கைச் சுட்டியதாக இருக்கலாம் எனப் பழந்தமிழர் கருதியிருக்கக்கூடும்.

கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்
காவிரிப் புதுப்புனல் கடுவரல் வாய்த்தலை
(சிலம்பு **10:102**)

மைம்மீன் புகையினும் தூமம் தோன்றினும்
தென்திசை மருங்கின் வெள்ளி யோடினும்
பெயல்பிழைப்பறியா புன்புலத்ததுவே (புறம்-117)

இப்பாடல்களில் வானத்தில் தீ நிமித்தம் தோன்றியும் மழை பொய்க்காமல் நன்கு பெய்த நிகழ்ச்சி கூறப்பட்டுள்ளது.

எனவே, பழந்தமிழர் வானநூலறிவைக் கண் மூடித்தனமாகப் பின்பற்ருமல் உறுதியாகவும் உண்மையாகவும் நம்பத்தகுந்த வான நூற் கூறுகளை மட்டும் விரும்பியோம்பி வந்தனர். அறிவுக் கூறுகளில் மடமை புகாதவாறு அரணிட்டுக் காத்த தமிழரின் தனிச் சிறப்பு பாராட்டத் தக்கது.

னேற்றமும் தோன்றுதிருக்கலாம். அதற்காக மருத்துவம் செய்வதை நிறுத்தி விடக் கூடாது. வெறியத்தை கண்ணுல் கூட பார்க்கக் கூடாது. மிதிவண்டியில் போகக்கூடாது. குதிரை ஏற்றம் கூடாது. உந்தில் நீண்ட தொலைவு செல்லக் கூடாது. மருத்துவம் செய்து கொள்ளும் பொழுது, புணர்ச்சியோ, அல்லது கலவிக்கிளர்ச்சியோ கூடாது. ஏன் எனில் மருத்துவத்திஞல் ஏற்பட்ட நன்மைகள், கிளர்ச்சியிஞல் ஏற்படும் குருதிப் பெருக்கத்தால் அழிக்கப்படலாம்.

மலவாயிலில் விரலை நுழைத்து, கவிழ் சுரப்பியை மெதுவாகப் பிடித்து விட வேண்டும். ஆனுல் இதை ஒரு மருத்துவர் செய்வது தான் நன்று. கவிழ் சுரப்பி, சீழும், நுண்ணங்களும் சேர்ந்து, நீண்டிருக்கும். அதைப் பிடித்து விட்டால் அச்சீழும், நுண்ணங்களும் அழுத்தப்பட்டு வெளியேற்றப்படுகின்றன. வெறுமையான சுரப்பியில் மறுபடியும் நீர் வந்து சேருகிறது. நான்கு அல்லது ஆறு கிழமைகளுக்கு, நான்கிலிருந்து ஏழு நாட்களுக்கு ஒரு முறை இவ்வாறு பிடித்து விடுவதால், பழைய சீழும் நுண்ணங்களும், வெளியேற்றப் பட்டு, வெளியேற்றப்பட்டு, புதிது, புதிதாக நீர் வந்து சுரப்பியை நிரப்புகின்றது. முடிவில் சீழும், நுண்ணங்களும் அற்றநிலை உண்டாகிறது. இம்முறையால், சிறுநீர்ப்பையும், சிறுநீர்ப் புறவழியும் தாக்கப்படலாம். ஆனுல் திறமையான மருத்துவரால், அந்த இக்கட்டைத் தவிர்க்க இயலும். கவிழ் சுரப்பியை பிடித்து விட்டபின் நுண்ணங்களைக்கொல்லும் தகுந்த நீரைச் சிறுநீர்ப்பைக்குள் செலுத்தி அதன்பின் சிறுநீர் பெய்யச் செய்து இடரைத் தடுத்து விடுவர்.

நாட்பட்ட கவிழ் சுரப்பி அழற்சி உள்ளவர்களுக்கு இரவில் தூங்கும் பொழுது அடிக்கடி ஒளிநீர் வெளியேறுகிறது. இதைப் பற்றி நோயாளி கவலைப்பட வேண்டியதே இல்லை. ஒளிநீர் வெளியேறுவதால் நோயாளிக்கு நன்மையே. பிடித்து விடுவதால் ஏற்படும் நன்மையைப் போன்றதே இதுவும். மேலும், கவிழ் சுரப்பியில் உள்ள சீழும் நுண்ணங்களும் கலவிக் கிளர்ச்சி இன்றியே வெளியேற்றப் படுகின்றன.

(தொடரும்)

கலை, அறிவியல், சமயம்!

மறைவாயும் புலனுகாமலும் இருப்பதில் அளப்பரும் அழகு பொதிந்துள்ளது. விளக்கமாயில்லாததை விளக்க முயல்வதே கலையின் நோக்கம்; அறிவியலின் நோக்கமும் அதுவே. ஊடுருவிப் பார்க்க முடியாத ஒன்று, பேரறிவாகவும், பேரொளியாகவும் இருக்கத்தான் செய்கிறது. நமது சிற்றறிவிஞல் அதைக் காணவோ கணிக்கவோ இயலாது. அப்படியே இயன்றுலும் அது தெளிவாக இராது. காண முடியாததைக் காண முயல்வதே கண்டதை விண்டுரைக்க முயல்வதே உண்மையான சமயக் கணக்கர்களின் குறிக்கோளும் தவறும் ஆகும். இந்த வகையிலே, இந்த வகையில் மட்டுமே, நான் ஓர் ஆற்றல் மிக்க சமயக்கணக்கன்.

—ஐன்சுடைன்.

ஆல்பர்ட் ஐன்சுடைன்

—செம்பியன் வல்லத்தரசு.

"இயற்கையைப் பற்றி எனக்குச் சிறிது தெரியும் ஆனால் மாந்தரைப் பற்றி ஒன்றும் தெரியாது" என்று நாடற்றிருந்த யூதர்கள் இசுரேலை அமைத்தபோது, அதன் தலைவர் பென்குரியன் அந்நாட்டின் ஆட்சிப்பொறுப்பேற்க வேண்டிய நிலையில் அவ்வறிஞர் சொன்னார். பதவிப் போட்டியே அரசியலாயுள்ள இன்று அவ்விடை நமக்கு வியப்பும் வேடிக்கையுமாக இருக்கும். ஆனால் சொன்னவர் அறிவியல் பேரறிஞர் **ஆல்பர்ட் ஐன்சுடைன்** எனும்போது அவர் தாம் அப்படிச் சொல்வார், அவரால்தான் அப்படிச் சொல்ல முடியும் என்றுணர்கிறோம். இன்று அப்பேரறிஞர் இருந்திருப்பின் தம் நூறாவது பிறந்த நாளை எளிமையாகக் கொண்டாடியிருப்பார்.

இந்த நூற்றாண்டின் சொந்தக்காரரான ஐன்சுடைன் தம் மூன்றாம் அகவை வரை பேச முடியாமலிருந்தார். பள்ளியில் சேர்ந்த போது கடைசி மாணவனாகவும், ஆசிரியரால் 'இவன் ஒன்றுக்கும் உருப்படான்' என்ற வாழ்த்தும் பெற்றார். எப்படியோ பள்ளிப் படிப்பை முடித்து, துன்பப்பட்டு சுவிட்சர்லாந்திலுள்ள ஒரு கல்லூரியில் சேர்ந்தார். அங்கும் அதே நிலை. அடித்துப் பிடித்துத் தேறிய பின் தந்தையின் நண்பரொருவர் உதவியால் அந்நாட்டின் அறிவியல் உரிமைப்பதிவு அலுவலகத்தில் எழுத்தராகப் பணி யேற்றார். அங்கிருந்து கொண்டுதான் தம் ஆய்வினை மேற்கொண்டும், எழுதிக் கொண்டும் இருந்தார்.

1905-ஆம் ஆண்டு அறிவியல் உலகையே குலுக்கியெடுத்த மூன்று ஆய்வடங்கல்களை வெளியிட்டார். அப்போது அவர் 26 அகவையுள்ள இளைஞர். ஒளி மின் விளைவு, சார்புநிலை சிறப்புக் கொள்கை என்ற அவரின் கோட்பாடுகள் இருநூறாண்டுகளாக உண்மையென்று ஏற்கப்பட்ட நியூட்டனின் கொள்கைகளை ஒதுக்கித் தள்ளின. அறிவியலின் புதிய பாதைகள் தொடர்ச்சியாக வெளிப் பெற்றன. பின் 1913-இல் சார்புநிலைக் கொள்கையை வெளியிட்டார். 1914-ல் செர்மானிய அறிவியல் கழகத்தில் பேராசிரியராகப் பொறுப் பேற்றார். 1919இல் அவரது சார்புநிலைக் கொள்கையின் உண்மையை அறிவியல் உலகம் ஏற்றுக் கொண்டது. 1921-ஆம் ஆண்டு, ஒளி-மின் விளைவு பற்றிய கண்டுபிடிப்புக்காக நோபல் பரிசு வழங்கப் பட்டது. அப்பரிசு தமக்குக் கிடைக்கும் என்ற உறுதியில் ஐந் தாண்டுகளுக்கு முன்பே முதன் மனைவியை மணவிலக்குச் செய்த போது பரிசுப்பணம் அவளுக்குச் சேரவேண்டும் என்று எழுதி விட்டார்.

கசங்கிய உடையும், கலைந்த தலையுமாக ஒரு சிறிது ஆரவாரமும் இன்றி, அறிவியலையே தவமாகக் கொண்டிருந்தார் ஐன்சுடைன். உடல் நலனைப் பேணாததால் வயிற்றுவலியில் துன்புற்றார். அவரின்

மருத்துவர் அவரைப் பற்றிக் குறிப்பிடுகையில், "அவரது மனம் எப்படியோ அப்படியே அவரது உடலும் ஒரு எல்லைக்குட்படா திருந்தது. படுக்கைக்குப் போகும்படி சொல்லாவிட்டால் விழித்துக் கொண்டேயிருப்பார்; தூங்கினுல் தூங்கிக் கொண்டேயிருப்பார். உணவுக்கு அழைக்காவிட்டால், உண்ணுமலே இருப்பார். அமர்ந்தால் உண்டு கொண்டே இருப்பார்" என்ருர். தம் கொள்கைகளில் உறுதியும் நம்பிக்கையும் கொண்டிருந்தார். ஈர்ப்பின் தன்மை பற்றிய தம் கொள்கையில், ஒளி பொருண்மையுடையதாகையில், அது ஈர்க்கப்படுகையில் வளைந்து செல்லும் என்ருர். நியூட்டனின் நேர் கோட்டுக் கொள்கையில் ஊறியிருந்தவர்களுக்கு இது சிறு குழப்பத்தையுண்டாக்கியது. ஐன்சுடைன், 'இதுதான் உண்மை; தேவையானுல் ஆய்ந்துக் கொள்க' என்று நம்பிக்கையுடனிருந்தார். அறிவியலறிஞர்கள் கதிரவனுக்கு மிக அருகிலுள்ள ஒரு விண்மீனைத் தேர்ந்தெடுத்து, கதிரவன் மறைப்பு நாள் வரும்வரை காத்திருந்தனர். அப்போதுதான் அவ்விண்மீனின் ஒளிப்பாதை கதிரவனின் ஈர்ப்பாற்றலால் வளைகிறதா என்று காண இயலும். 1919-ஆம் ஆண்டு இவ்வாய்வை மேற்கொண்டு அவரது கொள்கை உண்மையெனக் கண்டனர். உலகமே வியந்து போற்றியது. ஐன்சுடைன் நோய்ப் படுக்கையிலிருந்த தம் அன்னைக்கு இச்செய்தியை அஞ்சலட்டையில் எழுதினுர். அவர் வெறுப்படையும் அளவு ஏன் எதற்கென்றில்லாமல் புகழ்ந்தனர். "என்னைக் கோமாளியாக்கி விட்டார்கள்" என்ருர் அவர்.

அறிவியலையே வாழ்க்கையாக்கிக் கொண்ட அவர், தம் இன மக்கள் (யூதர்) இட்ரலால் விரட்டி விரட்டி அழிக்கப் பட்டபோது, தங்களுக்கென்று ஒரு தனி நாடு வேண்டும் என்ற அம்மக்கள் கோரிக்கையை ஏற்ருர். அதற்காகப் பாடுபட்டார். அவர்களுக்காக அமெரிக்க நாடுகளுக்குச் சென்று பொருள் திரட்டித்தந்தார். எனினும் அவரின் அறிவியல் நாட்டம் தொடர்ந்து அதற்குப் பாடுபட விரும்பாமல் தடுத்தது. இந்தக் கால கட்டத்தில் தான் அறிவியலில் மீண்டும் ஒரு புரட்சியை நிகழ்த்தினுர். மாந்த இனமே நன்றி பாராட்டத்தக்க அரிய உண்மையினை வெளியிட்டார். பொருள் ஒளிவடிவாகத் தன் ஆற்றலை வெளிப்படுத்தும், அதனுல் பொருண்மை குறையும் என்றும் பொருண்மையும் ஆற்றலும் ஒன்று மற்றொன்ருக மாறும், மாற்ற முடியும் என்றும் கண்டார். அதனை $E = Mc^2$ என்று சுருக்கமான வாய்பாடாக்கினுர். அணுவைப் பற்றிய புதிய

போசு—ஐன்சுடைன் புள்ளியியல்

ஐன்சுடைன் இந்திய அறிவியலறிஞர் எசு. என். போசு என்பார் கதிரியியக்கம் பற்றித்தாம் கண்டறிந்த கொள்கையினை ஐன்சுடைனுக்கு அனுப்பினுர். ஐன்சுடைன் அது தம் கொள்கையின் விரிவாவிருப்பது கண்டு செர்மானிய மொழியில் அதனை மொழி பெயர்த்து வெளியாகும்படி செய்தார். பின்னர் அக்கோட்பாடு 'போசு—ஐன்சுடைன் புள்ளியியல்' என்றும் அழைக்கப்பட்டது.

கோட்பாடு எழுந்தது. அதுவே ஆக்கத்திற்கும் போர் வெறி கொண்ட நாடுகளால் அழிவுக்கும் பயன்படுகிறது. அதனை எண்ணி அவரே பின்னர் வருந்தினார். செருமனியின் அணுகுண்டு முயற்சிக்கு எதிராக அமெரிக்க அணுகுண்டு செய்ய வேண்டும் என்று ஐசனோவருக்கு எழுதப்பட்ட கடிதம் இவரால் கையெழுத்திடப்பட்டது.

பின் தொடர்ச்சியாக இப்புடவி பற்றிய உண்மைகளை வெளியிட்டார். காலமும் வெளியும் ஒன்றையொன்று தொடர்வன என்றார் (Space Time Unitinum). அவையின்றிப் பொருள் இல்லையென்றார். இயற்கையின் ஆற்றலையும் அழகையும் உள்ளவாறே கண்ட அவர், இறைவனைப் பற்றிக் கூறியபோது மெய்யறிஞர் இசுபினோசாவின் கருத்தையொட்டியிருந்தது. "இறைவன் இயற்கை வடிவாயிருக்கிறான். இயற்கையின் ஒழுங்கமைப்பையே நான் இறை என்கிறேன்" என்றார். மாந்த இனத்தின் மேல் முழு அன்பு செலுத்திய அவர் ஒரு நிகரமைக் கொள்கையராக மக்கள் தொண்டராக மாந்த உரிமைகளுக்குப் போராடினார். உண்ணா நோன்பிருந்தார். ஊர்வலங்களில் அணி நடத்திச் சென்றார். அவரின் பார்வை தெளிவாகவும் உண்மையாகவும் இருந்ததனால் தம் கொள்கைகளை அச்சமின்றித் துணிவாகப் பேசினார்.

அவர் ஓர் அறிவியல் பேரறிஞர் எனினும் ஒரு துறை வாழ்க்கை வாழ்ந்தார் அல்லர். இளம் அகவையிலிருந்தே இசையில் ஈடுபாடுடையராய் இருந்தார். மனம் சலித்த நேரங்களில் நரம்பியம் வாசிப்பார். இவர் ஒரு முரட்டுத்தனமான, திறமையான படகோட்டி என்பதைப் பலர் அறியார். இவரின் உயிரான பொழுதுபோக்கே இதுதான். மற்றவர் படகுமேல் மோதுவதுபோல் ஓட்டிச்சென்று 'சட்'டென்று திரும்பிவிட்டு வெடித்துச் சிரிப்பார். உயிரச்சமின்றி இவர் செய்யும் இவ்வேடிக்கை மற்றவரை அச்சத்திலாழ்த்தும். இவர் அவ்வப்போது சிறுசிறு பாடல்களையும் எழுதினார்.

எபிகூரசு, நீயூட்டன், தார்வின், பிராய்டு போன்ற அறிவுப் புரட்சியாளர்களுடன் வைத்தெண்ணப்படும் ஐன்சுடைன் 1952-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 18-ஆம் நாள் மறைந்தார். அன்றிலிருந்து இன்றுவரை அவரது மூளையை மருத்துவ அறிஞர் அதன் சிறப்பினை அறிய ஆய்வு செய்கின்றனர். இதுவும் அவருக்கு ஒரு பெருமையே. அவரது உடல் எரியூட்டப்பட்டு சாம்பல் எங்கென்றறியாமல் மறைக்கப்பட்டது.' அவர் விரும்பியபடியே கல்லறையோ, நினைவுச் சின்னமோ, சிலைகளோ எழுப்பப்படவில்லை, பாதைகளுக்குப் பெயரிடப்படவில்லை. ஒரு சிறு மார்பளவுச்சிலை மட்டும் அவர் வாழ்ந்த இடத்தை அழகுபடுத்துகிறது.

தம் சார்புநிலை, காலவெளி, ஈர்ப்புக் கோட்பாடுகளை ஒன்றிணைத்து ஒரு புதிய வாய்பாடு காணும் முயற்சியில் அவர் வெற்றி பெறவில்லை. 'இந்த உலகம் ஐன்சுடைனுடையது (It is Einstein's Earth) எனும்படி அவரது அறிவு இவ்வுலகை ஆள்கிறது. உண்மைகள் அவரால்

தொடர்—4

பயிரை மேயும் வேலிகள்.

—தமிழவேள்.

தமிழக அரசில் உயர் அதிகாரியாக இருக்கும் ஒருவர், நெருக்கடி நிலை என்னும் சிறையில் நாடு தள்ளப்பட்டிருந்தபோது ஒரு கூட்டத்தில் பேசிய பேச்சு ஓர் ஆங்கில நாளேட்டில் வெளியிடப் பட்டிருந்தது.

அவர் பேசியிருக்கிறார்; "ஆங்கிலச் சொற்களைத் தனித் தமிழில் மொழி பெயர்ப்பது எளிய பொது மாந்தரிடையே குழப்பத்தைத்தான் தோற்றுவிக்கும்! ஆங்கிலச் சொற்களை அப்படியே எடுத்தாள்வது தான் அவர் அதனை எளிதில் புரிந்து கொள்ள உதவும். எடுத்துக் காட்டாக, 'கலெக்டர்' என்னும் சொல் எந்த ஒரு சிற்றூர்க்காரனும் எளிதில் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. அந்தச் சொல்லைத் தமிழில் 'தண்டல் நாயகம்' என்றோ, 'மாவட்ட ஆட்சி யாளர்' என்றோ, 'ஆட்சித் தலைவர்' என்றோ குறிப்பிட்டால் அதனைப் புரிந்து கொள்வது அவனுக்குக் கடினமாக இருக்கும். எனவே அத்தகைய இடங்களில் அதே ஆங்கிலச் சொற்களை அப்படியே தமிழில் எழுதினால் போதும்!"

தமிழ் நாட்டிலுள்ள சிற்றூர்ப்புற மக்களிடம் தாம் தூய தமிழ்ச் சொற்கள் இன்றும் வழங்கி வருகின்றன. பிறமொழிச் சொற்களை மிகுதியாகக் கலந்து பேசுவோர் நகர்ப்புற மக்கள்தாம். எனவே ஆங்கிலச் சொற்களைத் தமிழில் மொழி பெயர்க்காமல் அப்படியே எழுதினால் தான் சிற்றூர்ப்புற மக்களுக்குப் புரியும் என்று சொல்வது சரியன்று.

இந்தி மொழி வளர்ச்சி யடையாத மொழி. அந்த மொழியினர் கூட ஆங்கிலச் சொற்களை அப்படியே கையாளாமல் இந்தியில் எழுதாமல் மொழி பெயர்த்தே வழங்க விரும்புகிறார்கள். 'பார்லி மெண்ட்' என்னும் ஆங்கிலச் சொல்லை அப்படியே இந்தியில் எழுதாமல் "லோக் சபா" என்று மொழி பெயர்த்து விட்டார்கள். இப்போது ஆங்கில ஏடுகள் கூட **Parliament** என்ற ஆங்கிலச் சொல்லைப் பயன்படுத்துவதில்லை. **"Lok Sabha"** என்று இந்திச் சொல்லையே பயன்படுத்துகின்றன. நெடுநாள் வழக்கத்தில் இருக்கும்

(முன்பக்கத் தொடர்ச்சி)

வெளிப்படுத்தப்பட்டன. இவ்வளவு பேரறிஞரான அவர், அறிவுக் கடலின் கரையில் கிளிஞ்சில் பொறுக்கும் சிறுவன் என்று தம்மைச் சொல்லிக் கொண்ட நியூட்டனைப்போல எளிமையாகவும், அடக்க மாகவும் இருந்தார். இதுவே அவரது பெருமை. அவரது கொள்கைகள் நமக்கு எளிதில் தெளிவாகாவிடினும், அவரது வாழ்வு நமக்கு ஒரு விளக்கமாக இருக்கும் என்பதால் அவரது பிறந்த நாளன்று மட்டு மின்றி ஒவ்வொரு நாளும் அவரை ஆழ்ந்து எண்ணுவோமாக!

இந்தியா (India) என்ற சொல்லைக்கூட அப்படியே இந்தி எழுத்துக்களில் அவர்கள் எழுவதில்லை. அதனைப் 'பாரத்' என்றே இந்தியில் எழுதுகிறார்கள். எந்த ஓர் அஞ்சல் தலையைப் பார்த்தாலும் இது தெரியும். அதில் ஆங்கில எழுத்துகளில் தான் இந்தியா (India) என்று இருக்குமே தவிர இந்தி எழுத்துகளில் அது 'பாரத்' என்றே இருக்கும். 'இந்திய அஞ்சல் தந்தித்துறை' என்பதைக்கூட, "பாரதீய டாக் தார் விபாக்" என்று இந்தியில் மொழி பெயர்த்து அப்படி மொழி பெயர்க்கப்பட்ட, இந்திச் சொற்களையே ஆங்கில எழுத்துகளில் 'Bharathiya Dak Tar Vibag' என்று எழுதுகிறார்கள். 'தொலைக் காட்சி மையம்' என்று பொருள்படும் 'Television Centre' என்பதைக்கூடத் 'தூர்தர்சன் கேந்திரா' என்று இந்தியில் மொழி பெயர்த்து "Doordharsan Kendra" என்றே எழுதுகிறார்கள்! அந்த அளவு அவர்களுக்கு மொழிப்பற்று இருக்கிறது! அதைப் பார்த்த பிறகும் கூடத் தமிழர்களுக்குத் தாய் மொழிப்பற்று வரவில்லையென்றால், என்ன சொல்வது?

நம் அண்டை நாடான இலங்கையில் வாழும் சிங்களவர்கள்கூட Ceylon என்று இருந்த தங்கள் நாட்டின் பெயரை 'சிரிலங்கா' என்று தங்கள் மொழியில் மாற்றி 'Sri Lanka' என்றே ஆங்கிலத்திலும் எழுதச் செய்திருக்கிறார்களே! அப்படி ஒரு மொழிப்பற்று தமிழர்களுக்கு இன்னும் வரவில்லையே!

கடந்த பத்து ஆண்டுகளில் எத்தனைத் தூய தமிழ்ச் சொற்கள் வழக்கில் வந்திருக்கின்றன! கருவூலம், காசோலை, கோப்பு, பேருந்து, ஓட்டுநர், நடத்துநர், ஆய்வாளர், பொறியாளர், கோட்டம், நடுவர், செயலர், அமைச்சர், போன்ற தமிழ்ச் சொற்களை அறியாத் தமிழர்கள் இன்று இல்லையென்றே சொல்லலாம்.

தமிழ்நாட்டில் இன்று தமிழ்தான் ஆட்சி மொழி. மாவட்ட ஆட்சித் தலைவர் என்ற சொல்லும் வழக்கத்தில் வந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. அப்படியிருந்தும் ஓர் உயர் அதிகாரி 'மாவட்ட ஆட்சித் தலைவர் என்று சொன்னால் எளிய மக்களுக்குப் புரியாது. 'கலெக்டர்' என்று சொன்னால் தான் புரியும் என்று பேசுகிறாரே! வேலியே பயிரை மேய்கிறதே! பயிர் எப்படி நன்றாக விளையும்?

தமிழ்ப் பயிர் தான் எத்தனை இடையூறுகளைத் தாங்கி வளர வேண்டியிருக்கிறது! மண்ணில் மறைந்திருந்து அரித்து வருகின்ற வேர்ப்புழுக்கள் ஒருபுறம் வயலில் இறங்கி மேய்கின்ற ஆடு மாடுகள் ஒருபுறம். வயலைச் சுற்றியிருந்தே மேய்கின்ற வேலிகள் ஒருபுறம். இவற்றையெல்லாம் கவனியாமல் தூங்கும் தமிழர்களின் தூக்கம் ஒருபுறம்!

தமிழர்கள் எப்போதுதான் கண் விழிக்கப் போகிறார்களோ? தமிழ்ப் பயிருக்கு இருந்துவரும் இடையூறுகள் எல்லாம் எப்போது விலகப் போகின்றனவோ? தெரியவில்லையே! 0

நூல்: **பாரதிதாசனின் கதைப் பாடல்கள்.**

ஆசிரியர்: **திரு. ச. சு. இளங்கோ, க.மு.,**

வெளியீடு: **தமிழ்மணி புத்தகப் பண்ணை, திருவல்லிக்கேணி, சென்னை-5.**

விலை: **உருபா. 15-00. பக்கம்- 380.**

பாவேந்தர் படைப்புகள் நன்கு ஆராய்தற்குரியன. முன்னும் அறிஞர் பலர் திறனாய்வு நூல்கள் எழுதியுள்ளனர். திரு. ச. சு. இளங்கோ அவர்கள் ஆர்வத்தோடு பாவேந்தரின் கதைப் பாடல்களை ஆய்ந்து பண்டாரகர் பட்டம் பெற்றுள்ளார். இவ்விடுநூலில் பாவேந்தரின் 21 கதைப் பாடல்களை 7 தலைப்புகளில் ஆய்ந்துள்ளார். 'கதை மூலங்கள்' என்னுந் தலைப்புள்ள ஆய்வுரை இதுவரை பிறரால் எழுதப் பெறாத முறையில் புதியதாக அமைந்தது. மேனாட்டுப் பாவலர் தம் படைப்புகள் எவ்வெச் சூழ்நிலையில் யாக்கப் பெற்றன என்றும், குறித்ததொரு படைப்பு தோற்றுதற்குரிய அடிப் படைநிகழ்ச்சி அல்லது கருத்து யாதென்றும் மேலை நாட்டுத் திறனாய்வாளர் ஆய்ந்துரைப்பர். அந்நெறி தழுவி எழுதிய பகுதி இது. பாவும் பாவினமும் என்னுந்தலைப்பில் ஆசிரியர், பாவேந்தரின் யாப்பாற்றலினையும், யாப்பாளுந் திறனையும் பல்வகை நோக்கில் விளக்கிப் புள்ளி விளக்கங்களும் அளித்துள்ளார். ஆசிரியர், பாவேந்தரோடு தொடர்புடையாரை நேரிற் கண்டறிந்த செய்திகளையும் பயனளிக்கும் வண்ணம் இணைத்த முயற்சி பாராட்டத் தக்கதாகும். 'கதையுறுப்பினர் (பாத்திரம்) படைப்பு' என்னும் பகுதியும் சிறந்தமைந்துள்ளது.

மற்றும் இந் நூல் நடை ஒரு சில பகுதிகளில் மாறுதல் பெற்றுள்ளமை கருதத் தக்கதாகும். பல பிற மொழிச் சொற்களை ஆண்டுள்ளமை விலக்கத் தக்கதாம். 'பாரதிதாசன்-காலக் கண்ணோட்டம்' என்னுந் தலைப்பில் ஆசிரியர் பெருஞ்சித்திரனார் பாவேந்தரைச் சந்தித்த ஆண்டு 1949 எனத் தெரிய வருகிறது. இந் நூலின் கண் சில தொடர்கள் தமிழ் மரபுக்கு மாறுகப் பிறமொழி மரபொட்டிய பான்மையுடையதாயுள்ளமையை நுணுகிக் கண்டு வரும் பதிப்பில் திருத்துவது நலம்.

பாவேந்தர் ஆய்வு நூல்களில் முயற்சி மிக்க இந் நூல் பாராட்டி வரவேற்கத் தக்கதாகும். உழைப்பாற்றல் மிக்க ஆசிரியர் மேலும் பாவேந்தர் நூல்களை ஆய்ந்து வளஞ்சேர்த்தல் வேண்டும்.

—புலவர்க்கினியன்.

(கீழே உள்ள கட்டுரை கடந்த 4-6-79 **இந்து** நாளிதழில் வெளிவந்ததாகும். அன்பர்கள் பார்வைக்கென இதனை மொழி பெயர்த்து இங்கு வெளியிடுகிறோம்.)

திரவிட நாகரிகம் ஒரு கட்டுக்கதையன்று!

அனைத்திந்திய திரவிட மொழிகளின் கருத்தரங்கில், பேரா. பர். ஏ. சந்திரசேகர் தம் தலைமை உரையின்போது, திரவிட நாகரிகமாகக் கருதும் சிந்து சமவெளி நாகரிகம் பற்றிச் சில ஐயங்களை எழுப்பியுள்ளார். ஆரியர்கள் இந்தியாவிற்கு வருமுன் திரவிடர்களே இந்தியா முழுமையும், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில், பரவியிருந்தனர் என்பதும், நகர நாகரிகத்தைப் பெற்றிருந்தனர் என்பதும், எழுத்து முறையில் சிறந்த சீர்திருத்தம் பெற்றிருந்தனர் என்பதும், வரலாற்று முரண்பாடுகளைக் கொண்டன என அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர், திரவிடர்கள் என்று பேசப்பெறும் தென்னிந்தியர்களே சிந்து சமவெளி நாகரிகத்தை உண்டாக்கியவர்களின் வழிவந்தவர்கள் என்பது உண்மையாயின், தென்னிந்தியாவில் ஏன் அந்நாகரிகம் போல் ஒன்றுமில்லை; மேலும் அவர்கள் எழுத்து முறை என்னவாயிற்று; எனவும் வினவியுள்ளார்.

இக் கற்றறிந்த பேராசிரியரின் வினாக்களுக்கு விடையிருப்போமாயின், திரவிட நாகரிகம் இந்தியாவில் மட்டுமல்லாது, உலகத்திலேயே மிகத் தொன்மையானது, திரவிடர்கள் இந்தியா முழுவதும் மட்டுமன்றி, உலகம் முழுதும் பரந்து வாழ்ந்தனர் என்றே கூற வேண்டியிருக்கும். இவ்வுண்மை நம்மை நிலநடுக்கோட்டின் இரு புறமும் அமைந்துள்ள இந்தியப் பெருங்கடலினால் கொள்ளப்பட்ட இலெமூரியா கண்டத்தின் வரலாற்றிற்கு அழைத்துச் செல்கின்றது.

பேரா. **ஏக்கல் (Prof. Haechel)**, ஆசியா கடற்கரையில் அமைந்த சுந்தா (**Sunda**) தீவுகளிலிருந்து ஆப்பிரிக்கக் கண்டத்தின் கிழக்குக் கடற்கரை வரையில் இந்தியப் பெருங்கடலால் ஒரு கண்டம் உருவாக்கப் பெற்றிருந்தது என்றும், இதுதான் மாந்த இனத்தின் தொட்டிலென்றும், முதல் மாந்தன் தோன்றிய இடமென்றும் உறுதியாக குறிப்பிடுகின்றார். வயவர் **(Sir). சான் ஈவான்** என்னும் ஆங்கில நாட்டறிஞரும், தென்னிந்தியாதான் மாந்த இனத்தின் தொட்டில் என எண்ணுகின்றார்.

விந்திய மலைக்குத் தெற்கில் அமைந்த நிலப்பரப்பு நாவலந்தீவு என்றழைக்கப் பெற்றது. தமிழகம் பரந்து விரிந்த கண்டமாக, தெற்கில் மேற்கு ஆப்பிரிக்கக் கடற்கரையையும், ஆத்திரேலியாவையும், கிழக்கில் மிகத்தொலைவில் கமாசட்கா **(Kamaschstka)** வைத் தொட்டுக் கொண்டும் எல்லைகளைப் பெற்றிருந்ததெனத் தமிழக வழக்கில் உள்ளது. தொன் தமிழ்மொழிதான் தொலை நாடுகளிலெல்லாம் பேசப்படுவதென அறிஞர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். வயவர். **அண்டர் (W. W. Hunter)** என்பார் தம் 'இந்திய வரலாறு' என்னும்

நூலில், ஆசியாவின் வடகிழக்கு மூலைப்பகுதியில், அஃதாவது கமாசட்காவில் பேசப்பெறும் மொழி தொன் தமிழுடன் ஒத்திருக்கின்றது என்றும், மேலும் அது தமிழின் திசைமொழிபோல் தோன்றுகின்றது என்றும் குறிப்பிட்டுள்ளார். இதுபோன்றே நியூசிலாந்தின் (New Zealand) தென்பகுதியில் உள்ள மாவோரிகளால் (Maories) பேசப்பெறும் மொழிகள் தமிழுடன் தொடர்புடையவையாகும்.

இலெமூரியா கண்டத்தில் அல்லது தமிழகத்தில் அடுத்தடுத்து ஏற்பட்ட கடல்கோள் நிலச்சரிவால், மக்கள் வெவ்வேறு நிலப்பரப்பிற்குப் பெயர்ந்து சென்று, தொலை அமெரிக்காவிலும், மெக்சிகோவிலும் தங்கள் குடியிருப்புகளை அமைத்துக் கொண்டனர் என்பதில் அறிஞர்களிடையே ஒருமித்த கருத்து நிலவுகின்றது. இத்தாலியில் உள்ள தசுக்கானி (Tuscany)யில் பேசப்பெறும் மொழி, தமிழைச் சார்ந்த மொழிகளின் திசைமொழியென சொல்லப்படுகின்றது. மேலும் தொலை இசுக்காட்லாந்துவினர், தம் மொழி, (ஒழுக்கம்) பழக்க வழக்கங்களினால் ஓர் ஒற்றுமையைப் பெற்றிருக்கின்றனர் என மொழியாய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

உலகின் முதல்தர இலக்கிய மொழிகளான சமற்கிருதம், ஈபுரு, கிரேக்கம், போன்றவற்றில் அறிந்து கொள்ளக்கூடிய தமிழ்ச் சொற்கள் நிறைந்துள்ளதென பெரும் பேரறிஞர்கள் சுட்டியுள்ளனர். மேலும் சுவாமி விவேகானந்தரை மேற்கோள் காட்டுவோமாயின் "சென்னை தலைமையிடமே தமிழினத்தின் இருப்பிடமாகும். தமிழர் நாகரிகம் தொன்மையுடையது. இவர்களில் ஒரு பகுதியினர் சுமேரியர்கள் என்றழைக்கப் பெற்று, யுபிரேட்டசு ஆற்றங்கரையில் பன்னெடுங்காலத்து பெரும் நாகரிகத்தை பரப்பினர். அவர்களின் கணியம் (Astrology), சமய அறிவு (Religious lore), நடத்தை முறை (Morals), சடங்குகள் (Rites) தாம் அசிரிய, பாபிலோனிய நாகரிகங்கட்கு அடிப்படையாக அமைந்தவை. மேலும் இவைதாம் கிருத்துவ பைபிளின் தொன்மக் கதைகட்கு மூலமாகும். தமிழர்களில் இன்னொரு பகுதியினர் மலபார் கடற்கரையினின்று பரவி வியக்கத்தக்க எகிப்திய நாகரிகத்தைப் படைத்தனர். ஆரியர்களும் இவ்வினத்திற்கு மிகவும் கடன்பட்டவர்கள் அல்லது தொடர்புடையவர்கள் ஆவர்."

இலெமூரியப் பேரறிஞர் திரு. **உசார். எசு. சருவு** (Mr. Wishar S. Cerve) கீழ்வருமாறு உரைக்கின்றார். நமக்குக் கிடைத்த சான்றுகளினின்று நாம் மேலும் அறிவது என்னவெனின், இலெமூரியாவின் மேற்குப்பகுதி, இந்தியப் பெருங்கடலினால் உட்கொள்ளப்பட்ட பின், இலெமூரிய மக்கள் எல்லாத் திசை நோக்கியும் பிரிந்து சென்றனர். ஆப்பிரிக்காதான் மேற்பகுதியின் மிக நெருங்கிய நிலபரப்பாகும். உண்மையில், இன்று நாம் காணும் ஆப்பிரிக்காவின் ஒரு பகுதி இலெமூரியாவின் ஒரு பகுதியாக விருந்தது. இலெமூரியர்கள் கடல் கோள் நேரங்களில் கிழக்கு நோக்கியும், இப்பொழுது

அமைந்துள்ள தீவுகளான சுமத்திரா, சாவா, போர்னியோ, நியூகினியா, ஆத்திரேலியா, நியூசீலாந்து, மற்ற பிறவற்றிற்கும் சென்றிருக்கமுடியும் அதன்பின் அவர்கள் வட அமெரிக்க, தென் அமெரிக்கக் கரைகளில் தங்கள் குடியிருப்புகளை தோற்றுவித்துக் கொண்டனர்.

மேலும் திரு. உசார், தமது வியத்தகு பணியினால் **"இலெமூரியா-திகைக்கச் செய்யும் ஒரு நூல்'** (**Lemuria-a Startling Book**)-என்னும் நூலில் இவ்வின மக்களின் வகையினர் சாசுத்தா மலையின் அடிவாரச் சாலையில் எதிர்பாராத வகையாய் வெள்ளை உடையணிந்தவராயும், மிதியடிகளுடனும், நீண்ட சுருள் முடி உடையவராயும், உயரமான மதிக்கத்தக்க உருவமைப்புடனும், ஆனால் பொது மக்களின் கவனத்தை விரும்பாதவர்களாகவும் காணப்பட்டிருக்கின்றனர். அவர்களைப் படமெடுக்க முயற்சி செய்தபோதும், நெருங்கிப் பேச முற்பட்டபோதும், ஒவ்வொரு முறையும், அவர்கள் விரைவில் மறைந்துவிடுகின்றனர். ஒரு சிலர், அவர்கள் காட்டினுள் ஓடிப்போய் மறைவதாயும், மற்றும் சிலர், அவர்கள் ஒளியிலேயே மறைந்து விடுவதாயும் சொல்லுகின்றனர்.

'லாசு ஏஞ்சல்சு டைம்'சின் மே 22, 1932, சிறப்பு மலரில் திரு. **எட்வர்ட்டு லான்சர்,** தற்செயலாய் தாம் முதலாவதாகக் கண்டுபிடித்த இடத்தில், புதுமை வாய்ந்த, மிக்க ஒளியுடன் கூடி, மின்னக்கூடிய ஒளியைக் கண்டாராம். அதன்பின் அவ்வொளி குறிப்பிடத்தக்க நிலையில் மங்கிவிட்டதென்றும் கூறுகின்றார். மறைந்த இலெமூரியக் கண்டத்தின் கடைசி மக்கள்தாம் தம் இருப்பிடத்தை சாசுத்தா எரிமலை அடிவாரத்தில் அமைத்துக் கொண்டுள்ளனர் என்கிறார். உண்மையில் அழிந்த இனத்தின் நேர் வழி வந்தவர்கள் தம்மைத் தனிமைப் படுத்திக் கொண்டு நம் நடுமை இணைத் தொகுதியிலுள்ளனர்.

இலண்டனிலிருந்து வெளிவரும், **சானே,** என்னும் கிழமை யிதழ், தன் மார்ச்சு 19, 1932-இன் வெளியீட்டில், கிழக்குத் தீவுகளின் கடவுள்களைப்பற்றி விளக்கும்போது, கி.மு 20,000 ஆண்டுகட்கு முன் உயர்ந்த சிறப்புடைய நாகரிகத்தைப் பெற்றிருந்த, அழிந்த தமிழ்ப் பண்பாட்டைப் பற்றிக் குறிக்கின்றது.

இலெமூரிய மக்கள் ஆறுவது அறிவைப் பெற்றிருந்தனர். அவ்வாறுவது அறிவு ஓர் உறுப்பிற்குச் சமமாக அல்லது அது நம் உடலில் அமைந்துள்ள கோழைச் சுரப்பி (பிட்யூட்டரி)யுடன் சில வகையில் இணைக்கப்பட்டதாய் இருந்திருக்க வேண்டும். அறிவியலறிஞர்கள், உலகில் பல பகுதியிலும், இன்று வாழும் பலவகை மரபுகளின் மாந்தர்களுக்கு இவ்வுறுப்பு, உயர்ந்த நாகரிகம் பெற்றிருந்தவர்களைவிட, நீளமானதாக இருந்திருக்க வேண்டுமெனவும், காலப்போக்கில் அவ்வுறுப்பு சிறுத்து விட்டதென்றும் கூறு

கின்றனர். தொடக்க நிலை மாந்தனுக்கு இஃது ஒரு முகாமையான உறுப்பாக இருந்திருக்க வேண்டுமென்றும் கூறுகின்றனர்.

எவ்வாறுயினும், இவ்வாறுவது அறிவு கொண்டு, இலெமூரியர்கள் பொருள்களை, நாற்பரிமாணத்தில் காண முடிந்திருக்கின்றது. அக்காலத்தின் செதுக்கப்பட்ட எழுத்து முறையால் தாம் பார்த்தன வற்றையும் உணர்ந்தனவற்றையும் அறிந்தனவற்றையும் முறைப் படுத்தித் தொடர் நிலையில் எழுதி, இயற்கையில் நம்மிடமில்லாத உணர்வுகளுடன், அவர்தம் மாணவர்கட்கு உணர்த்தியுள்ளனர்.

அவர்கள் ஒரு மரத்தையோ அல்லது விலங்கையே அல்லது ஒரு கல்லையோ அல்லது ஒரு மலையையோ காண்பாராயின், அவை அவர்கட்கு உண்மையான உயர, அகல, தடிப்பினின்றும், கூடுதலான வடிவுடன் தெரிந்திருக்கின்றன. அவர்களின் பார்வை அண்டத்தின் இயல்பை அல்லது கண்ணுக்குப் புலனாகாத ஓர் இயல்பைப் பெற் றிருந்ததால், அவர்கள் அவற்றிற்கு வெவ்வேறு பெயர்களைக் கொடுக் கின்றனர். அவர்கட்கு, இவ்வாறும் வகை அறிவு இயற்கையின் ஒரு பகுதியாகவும், முப்பரிமாண விளத்தத்தைப் போன்றே முகாமை வாய்ந்ததாகவும் இருந்திருக்கின்றது.

இலெமூரியர்கள் மிக நெடுந்தொலைவுகளையெல்லாம், நாம் அறிவியல் முயற்சியால் கண்டுபிடிக்கப்பட்ட வானொலியைவிட, மிக வலிமைமிக்க முறையில், மனத்தாலேயே (Mental Telepathy) தொடர்பு கொண்டனர். இன்று நாம் மின்னியல் போன்ற இயற்கை ஆற்றலின்மேல் நம்பிக்கை வைத்து, பல (கருவிகளை) பொறிகளை உருவாக்கி ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செய்தி பரப்பு கின்றோம். ஆயின் இலெமூரியர்கள் தம் உடலினின்றே சீரமைக்கப் பெற்ற, அதிக அலைகளைக் கொண்டு, நாம் பயன்படுத்தும் செப்பமற்ற மின் ஆற்றலைவிடச் சிறந்த முறையில் அன்று பிறருடன் தொடர்பு கொண்டனர். அவர்களின் ஒலிபரப்பு முறை இக்கால் கொண்டுள்ள பெரும் பொறிகளினின்றும், மின்னாற்றல் குறுக்கீட்டுப் புயலி னின்றும், பொருளியல், சட்ட ஒழுங்கு முறைகளின்றும், அப்பாற் பட்டதாயிருந்தது. அவர்களின் ஒலிபரப்பு, கேட்பு முறைகளின் சார்பு நிலைகள், நம் வெளிப்பாடுகளான, வானொலி, தொலைவரி முறையினின்றும் மிக உயர்ந்ததென்று நாம் உறுதியாகச் சொல்ல லாம்.

திராவிட மரபின் காலவரையறை கீழே வருமாறு:

கி.மு. 30,000 முதல் கி.மு. 16,500 வரை: பஃறுளி ஆற்றங் கரையில் தென் மதுரைத் தமிழ்க் கழகம் முத்தலம் நிலந்தரு திருவிற் பாண்டியனால் அமைக்கப் பெற்றது.

கி.மு. 16,500 முதல் கி.மு. 16,000 வரை: ஆப்பிரிக்க கருப்பர்களால் (Negroes) தமிழகம் ஆளப்பட்டது. உடுக்கண்ணன், மறைக்கண்ணன், அறிவிடமாலை, திருப்புரத்துகள் என்பவர்கள் முகாமையான அரசகளாவர்.

கி.மு. 16,000 முதல் கி.மு. 14,500 வரை: மகேந்திர மலையில் இறையனாரால் தமிழகம் அமைக்கப் பெற்றது.

கி.மு. 14,500 முதல் கி.மு. 14,470 வரை: செங்கோவால் மணிமாலை தமிழ்க் கழகம் தொடங்கப்பட்டது.

கி.மு. 14,740 முதல் கி.மு. 14,058 வரை, சிங்கமுகன், தருக்கன், பானுகோபன் என்னும் மங்கோலியர்களால் தமிழகம் ஆளப் பெற்றது.

கி.மு. 14,058: குமர வேள் சூரபத்மனை வென்றார்.

கி. மு. 14,058: முதன் முறையாகக் குமரிக் கண்டம் கடலால் கொள்ளப்பட்டது.

கி.மு. 14,058 முதல் கி.மு. 14,004 வரை: திருச்செந்தூரில் குமரவேளால் தமிழ்க்கழகம் நிறுவப்பெற்றது.

கி.மு. 14,004 முதல் கி.மு. 9,564 வரை: குமரியாற்றுத் தென் மதுரைத் தலைக்கழகம்.

கி.மு. 9,564: இரண்டாவது முறையாக குமரிக்கண்டம் கடலால் கொள்ளப்பட்டது.

கி.மு. 9,564 முதல் கி.மு. 7,105 வரை: தமிழகம் இராக்கதர் களால் ஆளப்பட்டது.

கி.மு. 7,500: முதுகுடுமிப் பெருவழுதி இராக்கதர்களை வென்றார்.

கி. மு. 7,500 முதல் கி.மு. 6,900 வரை: தமிழ்க் கழகத்தால் 'இந்திரம்' தொடங்கப் பெற்றது.

கி.மு. 6,900 முதல் கி.மு. 6,805 வரை: மறுமுறையும் இராக் கதர்களின் ஆட்சிக்குத் தமிழகம் உட்பட்டது.

கி.மு. 6,802 முதல் கி.மு. 3,105 வரை: இடைக்கழகக் காலம் முதல் முடதிருமாறன் பாண்டியனால் தமிழ்க்கழகம் தாமிர பாணி ஆற்றின் கரையிலமைந்த கபாடபுரத்தில் நிறுவப்பெற்றது.

கி.மு. 3,105: இடை க்கழகக்காலம்: துவாரகைக் கோமான் கண்ணன் தெற்கு மகாபாரதப் போர் தொடுத்தார்.

கி.மு. 3,102: கலியுகம் பிறந்தது.

கி.மு. 2,387 முதல் கி.மு. 2,030 வரை: காடு கொள்.

கி.மு. 1,915 முதல் 1,715 வரை: திருப்பரங்குன்றத்தில் தென்மதுரைத் தமிழ்க்கழகம் உருவானது.

கி.மு. 1,715: இறுதி முறையாகக் குமரிக்கண்டம் கடலால் கொள்ளப்பட்டது.

கி.மு. 1,715 முதல் கி.பி. 235 வரை: கடைக்கழககாலம்.

இந்த நிகழ்ச்சிகளின் கால வரையறை தெளிவாக, சரியான வரலாற்றைக் கொடுக்கின்றது. உண்மை நிகழ்வு நாட்களையும்

கணியத்தின் மூலம் பேரா. கே. சீனுவாச இராகவன் அவர்களால் சரிபார்க்கப் பெற்று உறுதி செய்யப்பட்டது. இந்நிலையில் கீழ் வரும் உண்மைகளை முடிவாகக் கொள்ளலாம்.

1. உலக முதன் நாகரிகத்திற்கு தமிழகம்தான் தொட்டிலாக இருந்திருக்கின்றது.

2. முதல் மாந்தன் தமிழகத்தில் தோன்றி அதன்பின் உலகின் பல்வேறு பகுதிகட்கும் சென்றான்.

3. தமிழ்மொழி உலக மொழிகளில் தொன்மையுடையது.

4. ஆரியர்கள் இலெமூரியர்களின் வழி வந்தவர்களே. முதன் முதல் ஐரோப்பாவிற்குச் சென்று பின் இந்தியாவிற்கு வந்தவர்களே இவர்கள்.

5. சிந்து சமவெளி நாகரிகம் திரவிடர்களுடையதாகும். இது தெற்கிலிருந்து வடக்கே சென்றதாகும்.

—சி. எசு. மகாதேவன்.

(16-ஆம் பக்கத் தொடர்ச்சி

சைபீரியாவின் யாகுத், துவினியன், அல்தாயன், காகசசு பகுதி மக்கள் பேசும் மொழிகள் ஐந்தாவது பிரிவைச் சார்ந்தவையாகும்.

சோவியத்து நாட்டில் அதிகமாகப் பேசப்படும் மொழிகளில் முதலாவது இடத்தையும், அவற்றைப் பேசும் மக்களின் எண்ணிக்கையில் மூன்றாவது இடத்தையும் ஐபீரியன்-காகசசு மொழிக் குடும்பம் பெற்றுள்ளது.

சியார்சியா, அப்காசு, அபசினியான், அதிகே, கபர்தியன்-சிர்காசிய, அவார், லிசியன், தார்சியன், லாக், தபசாரன், இன்குசு, செசென் இன்னும் பல மொழிகளும் இக்குடும்பத்தைச் சேர்ந்தவையாகும்.

இம்மொழிகள் சியார்சியக் குடியரசிலும், அப்காசியன், கபர்தினியன்-பல்கார், தாகெத்தான், செசெனே இன்குசு ஆகிய தன்னாட்சிப் பகுதிகளிலும், அதிகே, கரசாய்-செர்கெசு தன்னாட்சிப் பகுதிகளிலும் பேசப்படுகின்றன.

பின்னோ-உக்ரிக், சமயேதே மொழிகள், யூரல் மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை. பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கையிலும், பேசும் மக்களின் எண்ணிக்கையிலும் யூரல் மொழிப்பிரிவு நான்காவது இடத்தைப் பெறுகிறது.

பழங்கற்கால-ஆசிய மொழிகளை, நமக்குத் தெரிந்த மொழிக் குடும்பங்கள் மற்றும் குழுக்கள் எதிலும் சேர்க்க இயலாது. இவை சுக்சி, கோர்யாக், இத்தல்மென், எசுக்கிமோ, அலெயெத் மொழிகளாகும். ஆர்ட்டிக் கடல் ஓரப் பகுதிகளிலும், சைபீரியாவிலும், தூர கிழக்கிலும் சிதறிக் கிடக்கும் தேசிய இனங்களால் இம்மொழி பேசப்படுகிறது.

o

செய்திகள்

1. உத்தமன் - விசயா; சுப்பிரமணி - செந்தாமரை வாழ்க!

கடந்த மேழம் 19 (2-5-79) அறிவன் காலை 8-30 மணியளவில், சென்னை, செங்குன்றத்தை அடுத்த பாடியநல்லூரில், பர்மா தமிழர் சங்கச் செயலரும் தென்மொழியன்பரும் ஆகிய ப. சு. கணபதி அவர்களின் மகன் **உத்தமனுக்கும்,** ராசராசன் சரக்குந்து உரிமையாளர் ம. மருதையா அவர்களின் மகள் **விசயா**விற்கும், அ. மாரிமுத்து அவர்களின் மகன் **சுப்பிரமணி**க்கும், ந. வரதராசன் அவர்களின் மகள் **செந்தாமரை**க்கும் இணைதிருமணம், தி.மு.க. பொதுச் செயலாளர் பேரா. **க. அன்பழகன்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தி.மு.க. வட்டத் தலைவர்கள், செயலர்கள் அறிஞர்கள் பலரும் மணமக்களை வாழ்த்தினர். ஆசிரியர் பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** அவர்களும், பாவலர் **நாரா. நாச்சியப்பன்** அவர்களும் சிறப்பு வாழ்த்துரையாற்றினர். இனிய விருந்துக்குப்பின் திருமண விழா சிறப்புற நிறைவுற்றது.

2. நெமிலி, தென்மொழி பயிலுநர் அவைத்தொடக்கவிழா:

சென்ற மேழம் 21 (4-5-79) அன்று அரக்கோணம் வட்டம், திருமால்பேறு (நெமிலி) என்னும் ஊரில், பிற்பகல் 3 மணியளவில், தென்மொழி பயிலுநர்அவை தொடங்கப் பெற்றது. நிகழ்ச்சிக்கு புலவர் திரு. **ந. வே. இளங்கோவன்.** க.இ. (பள்ளி இளம் ஆய்வாளர்) தலைமை தாங்கினர். நெடுநாளைய தென்மொழியன்பரும், விழா அமைப்பாளரும், திருமால்பேறு தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியரும் ஆகிய திரு. **மா. செ. தமிழ்மணி** அவர்கள் வரவேற்புரையாற்றினர். அதன்பின் பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** அவர்கள் 'தமிழ் நல மீட்பு' என்னும் தலைப்பில் சிறப்புரை ஆற்றித் 'தென்மொழி பயிலுநர் அவை'யைத் தொடங்கி வைத்தார். விழா இறுதியில் ஏற்கனவே அவ்வட்டாரத்தில் உள்ள இருபது இருபத்தைந்து தென்மொழி உறுப்பினர்களுடன் மேலும் பலர் தென்மொழியிதழ்க்கும் தமிழ்ச்சிட்டுக்கும் ஆண்டு உறுப்பினர்கள் ஆயினர். முடிவில் நெடுநாளைய தென்மொழியன்பரும் திரு. **மா. செ. தமிழ்மணியுடன்** இணைந்து தமிழ்த் தொண்டாற்றி வருபவருமாகிய திரு. **மு. கதிரவன்** நன்றி கூறினர். விழாவின் எல்லா நிலைகளிலும் மேற்கண்ட இருவர்க்கும் தோன்றாத் துணைவராக இருந்து பணியாற்றிய ஆசிரியர் திரு. **பெ. வே. இராமன்** அவர்களின் ஈடுபாடு பெரிதும் பாராட்டுதற்குரியது. விழாவில் திருவாளர்கள் சு. அருளின்பன். க. கிருட்டிணன் ஆகியோர் தென்மொழி வளர்ச்சிக்கெனத் தலைக்கு 5 உருபா நன்கொடையளித்தனர்.

3. நெமிலி ஊ. ஓ. தொடக்கப் பள்ளி, திருமால்பேறு: 49-ஆம் ஆண்டு விழா.

நிகழும் தி.பி. 2010 மேழம் 21 (4-5-79) மாலை 6-30 மணியளவில், நெமிலி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி (திருமால்பேறு) 49-ஆம் ஆண்டு விழா, திரு. சு. **கிருபாநந்தன்** அவர்கள்

தலைமையில் இனிதே நடைபெற்றது. திரு. **பெ. வெ. இராமன்** வரவேற்புரையாற்றினர். திரு. **க. மணி** ஆண்டறிக்கை படித்தார். அடுத்து, மாணவர் பேச்சுப்போட்டிக்குப்பின் திருவாளர்கள். **பி. சி. அசனல்லி** அவர்களும், புலவர் **இலக்குவனர்** அவர்களும் சிறப்புரையாற்றினர். அடுத்துப் பாவேந்தர் படத்தைத் திறந்து வைத்துப் பாவலரேறு **பெருஞ்சித்திரனர்** அவர்கள் ஓர் எழுச்சிச் சொற்பொழிவாற்றினர். பின், திரு. **க. கிருட்டிணன்** அவர்கள் பெரியார் படத்தைத் திறந்து வைத்துச் சிறப்புச் சொற்பொழிவாற்றினர் பின்னர் மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சிகள், 'விழிப்பு' 'கட்டபொம்மன்' என்னும் இரு நாடகங்கள் நடைபெற்றன. விழா இறுதியில் திரு. **மு. மணிகண்டன்** அவர்கள் மாணவ மாணவியர்க்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார். திரு. **ச. இரா. இராதாக்கிருட்டிணன்** நன்றியுரைக்குப்பின் விழா இனிது நிறைவுற்றது. பள்ளியின் சார்பாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உரு 10 அன்பளிப்பாகத் தரப்பெற்றது.

4. தயாளன் (தளிஞ்சான்)—உமாதேவியர் வாழ்க!

நிகழும் தி.பி. 2010, விடை 13 (27-5-79)ஆம் பக்கல், காலை 9-30 மணியளவில், புதுவை, கதிர்காமம் திரு. **வை. பழனிசாமி** அவர்களின் மகன், செல்வன் **தயாளன்** என்கின்ற **தளிஞ்சானுக்கும்**, சூணம்பேடு திரு. மு. **முருகேசன்** அவர்களின் மகள் செல்வி. **உமாதேவி**க்கும், புதுவை, பெத்துசெட்டிப் பேட்டையில், பாவல்ரேறு **பெருஞ்சித்திரனர்** அவர்கள் தலைமையில் திருமணம் சிறப்புற நடைபெற்றது. திருவாளர்கள் **பூ. சண்முகன் அரிகிருட்டிணன்,** சித்தோடு பாவலர் **குமர. நடவரச ஈவப்பனர்** ஆகியோர் மணமக்களை வாழ்த்தி உரையாற்றினர். இறுதியில் தலைவர் அவர்களின் சிறப்பு வாழ்த்துரையுடன் திருமண விழா இனிது நிறைவுற்றது.

நன்கொடைகள்:

1) புலவர் **கி. சண்முகம்** க.இ. அவர்கள் துணைவி திருவாட்டி. **பேச்சியம்மாளுக்**குக் கடந்த மீனம் சு. (20-3-79)-இல் பிறந்த பெண்மகவுக்கு பொறுப்பாசிரியர் **பெருஞ்சித்திரனர்** அவர்கள், **முழுமதி** என்று பெயர் சூட்டியதன் நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உருபா 5 அன்பளிப்பாக வரப்பெற்றது. குழந்தை **முழுமதி** செழிப்புற வாழ்ந்து சிறக்க, தென்மொழி வாழ்த்துகிறது.

2) கோபிசெட்டிபாளையம், நெடுநாளைய தென்மொழியன்பரும், அதன் வளர்ச்சியில் ஆர்வமும் அக்கறையும் காட்டும் பேராளரும், அரசு வைப்பாக எழுத்தரும் ஆகிய திரு. **க. இராமசாமி** அவர்கள், தென்மொழி வளர்ச்சிக்குக் கடந்த 27-3-79 அன்று, பொறுப்பாசிரியர் அவர்கள் அங்கு நிகழ்ச்சிக்குச் சென்றிருந்த பொழுது தென்மொழி வளர்ச்சிக்கென உருபா 100. (நூறு) நன்கொடையாக அளித்தார்கள். தென்மொழி அவர்களை வாழ்த்தி நன்றி தெரிவிக்கிறது.

வெறும் வாழ்க்கைப் போராட்டங்களை மட்டிலும் கண் காணிப் பதை விட்டு விட்டுக், கடலுள் ஆழ்ந்து கிடக்கும் குமரி நாட்டை ஆராய்ச்சி செய்ய அரசு ஆவன செய்யாதா? தமிழரும் நம் தலைவர் களும் இணைவரா? நன்றி; தங்களன்புள்ள,

—**கி. பாலு**, மின்பாறை.

0:653: தனித்தமிழைக் காக்கும் உயிர்க் காற்றே! எனது அருமை மிகு திருத்தகை ஆசிரியரே! மகிழ்ந்து தொழுகிறேன். குறிக்கோள்களையும், கொள்கைகளையும் திட்டங்களையும், படிமை யாக, சீர்மையாக, செழுமையாக நிறைவேற்றும் நிலைக்கு மகிழ்ந்து நலமுடன் வாழி எப்பொழுதும் என்று வாழ்த்துகின்றேன்.

ஐயா, எனக்குத் தனித்தமிழ் பயில மிகவும் ஆவலாக உள்ளது. இங்கு எனக்குப் பாடம் கற்பிக்க யாருமே துணையில்லை; எனவே எனக்குத் தெரியாததெல்லாம் மடல் மூலம் கேட்பேன்; கற்றுத்தர வேண்டும். தங்களோடிருந்து எல்லாவற்றையும் படிக்க விரும்பு, கிறேன் ஆனால் வாய்ப்புக் கிட்டவில்லை. உறுதியோடு இருக்கிறேன் என்றாவது ஒரு நாள் உங்களது மாணாக்கனாக ஆவேனென்.

நம் கலை, ஒழுக்கம், பண்பாடு, இயல் இசை, நாடகம் யாவற்றையும் ஓங்கி வளர்த்திட-பரப்பிடத் தமிழகவரசில், "தனித் தமிழ் அமைச்சுத் துறை" என்ற ஒன்றை புதிய வடிவில் ஏற் படுத்தினால் எல்லா வகையிலும் நமக்குப் பாதுகாப்பாக இருக்குமே! மீண்டும் மூவேந்தர்களின் ஆட்சி நடக்கிறது போல் மணக்குமே! இந்தக் கருத்து தங்களுக்குச் சரியாகப் பட்டால் பொறுப்புள்ளோர் களிடத்துக் கருத்துரையாடி, ஆக வேண்டுவன செய்யத் துணிவுடன் அடி எடுத்து வைப்பீர்களாக.—இர **நிரயநண்பர்**, சிங்கப்பூர்-24.

0:654: உயர்திரு பாவலரேறு அய்யா அவர்கட்கு, அனைத்து நலனும் வளமும் பெற்றுப் பேரகவை வாழ்கவென நான் முதற்கண் வாழ்த்துகிறேன். இனவீழ்ச்சி, மொழி வீழ்ச்சி, அறிவுத் தாழ்ச்சி அனைத்தையும் ஒருங்கே அடைந்த தமிழர்கள், பகுத்தறிவுப் பகலவனும் தந்தை பெரியார் அவர்களின் எத்தனையோ ஆண்டுக் கால உழைப்பிற்குப் பிறகு, சிறிது சுரணைப் பட்டவர்களாக உள்ளனர். அவர்தம் கொள்கையினை ஏற்றுச் "சூத்திரனாக்கிய" சூழ்ச்சியை உடைக்க வீறு கொண்டனர். அக்கால், அய்யாவை அனைத்துத் துறையினரும் எதிர்த்தனர். அப்போதுதான் பாவேந்தர் பாரதிதாசனார் பெரியாரின் கொள்கைகளைச் செவிமடுத்து—அவரது கட்டு முகனை [அதிகார] கட்டளைக்கு உடன்பட்டுப் புரட்சிப் பாவல ராக மாறினார். அதன்வழி ஒப்பிலாப் பாக்களையும், பாவியங்களையும் படைத்தார். அதுவே பெரும்பான்மைத் தமிழர்களை இன வீறு கொள்ளச் செய்தது. அத்தகைய பாவேந்தர் பெருமகனாரின் வழித் தோன்றலாகிய தாங்களும் அவர்வழிச் சென்று—அவரையும் விஞ்சி விட்டீர்கள். ஆம், **'உலகியல் நூறு', 'நூறாசிரியம்'** போன்ற தனித்தமிழ்க் கனிச்சாறுகள், எத்தகைய அப்பட்டமான—அழமான மனவியல் மெய்ம்மங்களைக் கூறுகின்றன! இக்காலத்தில் தங்களைப் போன்ற அறவாணர்களைக் காண்பதரிது.

அறிவுசால் அய்யா! தங்களின் தமிழ்த் தொண்டு இத்துடன் நில்லாது, இன்னும் பெருக வேண்டுமாய் நான் ஈடனையுறுகிறேன். திருக்குறளுக்கு நல்ல முறையில் விளக்கவுரை எழுத வேண்டுமென நான் விரும்புகிறேன். ஏனென்றால் முந்திய உரையாசிரியர்கள்

பலரும் ஒரு சில குறள்களுக்கு உரை எழுதியதைப் படிக்கும்போது குழப்பமே வருகிறது. இம்மயக்க நிலையை போக்கத் தாங்கள் தாம் முயல வேண்டும்.

இறுதியாக ஒன்று, தென்மொழியில் எப்போது எழுத்துச் சீர்திருத்தத்தைக் கடைபிடிக்கப் போகிறீர்கள்? மிகுதியான எழுத்து வடிவங்களைக் குறைப்பதில் தங்களுக்கு அட்டியென்ன? நமக்குத் தேவை ஒலிகள் தாமே? அதற்காக, உயிரும் மெய்யும் என்ற கொண்டல் மகாதேவனின் எழுத்துக் குறைப்பை நான் சிறிதும் ஒப்பேன். இதுபற்றித் தீர ஆய்ந்து செயல்படுங்கள். அன்பன்,

—**இரா. இலக்குமணன்**, பின்னையூர் (தஞ்சை. மா.வ.)

0:655: பேரன்புக்குரியீர், வணக்கம். நீங்கள் வெளியிடும் **'தென்மொழி'** என்னும் இலக்கிய இதழ், மார்ச்சு-ஏப்பிரல்'79 ஒன்றை அண்மையில் வாங்கினேன். வாங்கியதற்குக் காரணம் என் நண்பர் அமிர்தலிங்கம் அவர் துணைவியார் இருவரின் படத்தை இதழின் அட்டை மீது பார்த்தேன். நீங்கள் எழுதிய உள்ளுரையையும் படித்தேன். அதில் குறிப்பாக **இந்து** நாளிதழ் போன்று தமிழர்க்கு ஒரு நாளிதழ் இல்லாமையைச் சுட்டி, இந்நாட்டின் தமிழர் இது குறித்து அக்கறையின்றியும் இருப்பதை எழுதியுள்ள செய்தியை நான் அடிக்கோடு இட்டுள்ளேன். இனி, என்னைப்பற்றி ஓரிரு சொற்களில் கூறி விடுகிறேன். நான் அயல்நாட்டுத் தமிழன். என் நாடு மொரீசியசு (**Mauritius**). நான் இங்குத் தமிழ்மொழி, இலக்கியம், சமயம் பயில வந்துள்ளேன். இம்மடல் மூலம் மிக முகாமையான செய்திகளை அறிவிக்க விரும்பவில்லை. தங்களை நேரில் சந்தித்து உரையாட விரும்புகிறேன்.

இது தேர்வுக் காலம். தேர்வு முடிவுற்றதும் தாய்த் தமிழகம் சுற்றிப் பார்த்து விட்டுக் காசுமீரம் செல்வேன். ஆகவே, சென்னைக்கு வருவேன். உங்களை எப்போது, எந்த மணியில், எங்குச் சந்திக்க வியலும் என்று அருள் கூர்ந்து அறிவிப்பீர்களானல், நான் அவ்வாறே சந்திப்பேன். தாய்த் தமிழகத்தில் எல்லாம் உண்டு; தமிழ் தவிர. தமிழிலக்கியத்தைச் சிறப்புப் பாடமாகப் படிக்கும் முதுகலை மாணவர்க்குத் தமிழில் பேச நா கிடையாது. 'உங்கள் **wipe (wife)** .... ' 'புக்கு (**Book** .... ', (**Ladies**........... **ticket**............. போன்ற கலப்பு மொழியைக் கேட்டு வெறுப் படையாமல் இருக்க முடியுமா? தமிழ்த் தாய் வணக்கம் பாடி விட்டு இந்தி இசையில் திளைக்கும் தமிழிலக்கிய மாணவர்கள், 'சார்', 'பிளாக் போர்டு', 'அட்டென்டன்சு' பேசும் ஆசிரியர்கள்! . தமிழ் நாடா? அல்லது...?பல செய்திகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். உங்களுக்கு எழுத நல்ல செய்திகள் கிடைக்கும். அண்மையில் உருசிய நண்பர் ஒருவரைச் சந்தித்தேன்; அவரிடம் ஆங்கிலத்தில் உரையாடினேன். அவர் நல்ல எளிய தனித் தமிழில் என்னிடம் பேசினர். எந்தத் தமிழ் மாணவராலும் இப்படிப்பட்ட தமிழால் பேச முடிவாது. தமிழ் ஆசிரியராலும் முடியாது. வியப்பு! நன்றி.

—**அ. புட்பரதம்**. மதுரை-9.